**கவனிக்க.-** *01.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1836 - 2013 නොවැම්බර් මස 08 වැනි සිකුරාදා - 2013.11.08

*1836 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1500 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1514 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2013, நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, மார்கழி மாதம் 09 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஐப்பசி 21.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | வலப்பனை | மெதபலாத்த பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வலப்பனை பிரிவில் விவாகப் (பொது/ கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், நுவரெலியா |

11-205

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, மார்கழி மாதம் 08 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, ஐப்பசி 22.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | கம்புறுபிட்டிய | மாபெலான பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபடபத்துவ வடக்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |

11-296

---

## திருத்தம்

**சுகாதார அமைச்சு**

உளவியல் நிபுணர் (Psychologist) (களத்தில்/அலுவலகத்தில் பணியாற்றுபவர்கள் பிரிவு - 01 சேவை வகை) பதவிக்கு போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

2013.10.17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 2013.09.15 ஆந் திகதி என பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளதானது 2013.11.15 ஆந் திகதி என திருத்தப்பட்டுள்ளதென்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

(வைத்திய கலாநிதி) வை. டி. நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
கொழும்பு 10.

11-235

## சுகாதார அமைச்சு

### களஃஅலுவலக உத்தியோகத்தர் 2 ஆம் பிரிவு சேவை வகையின் (MN05-2006A) மனநல சமூக சேவையாளர் - தரம் II பதவிக்கு திறந்த போட்டிப் பரீட்சை அடிப்படையில் ஆட்சேர்த்தல்

சுகாதார அமைச்சின்கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளுக்கு மனநல சமூக சேவையாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து அமைச்சு செயலாளரினால் அல்லது அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் அவர்களது உடற்றகுதி மற்றும் தகைமைகள் ஒரு நேர்முகப் பரீட்சையினூடாக பரீட்சிக்கப்பட்டு பின்னர் இப்பதவிக்காக நியமிக்கப்படுவார்கள். (சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையிலும் அமைச்சின் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் சுகாதார அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.)

2. **வேண்டப்படும் தகைமைகள் :**

(1) கல்வித் தகைமைகள் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சமூகவியல், சமூக மானிடவியல் அல்லது மனநலவியல் தொடர்பான விசேட பாடமாகக் கொண்டுள்ளதான பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றுடன் சுகாதார அமைச்சின் மனநல சுகாதார தாபனம் ஒன்றில் ஆறு (06) மாதங்கள் மனநல சமூக சேவை சம்பந்தமான பாடநெறியில் பயிற்சி ஒன்றைப் பெற்றுள்ளதுடன் அதன்பின் மனநல வைத்திய நிபுணத்துவரின் மேற்பார்வையின்கீழ் மனநல கூறில் 2 வருடங்கள் சேவையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் ;

(2) உடற்றகுதி.- நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றுவதற்கு இயலக்கூடியதாக மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சிறந்த முறையில் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(3) ஏனையவை :

* 2013.01.01 ஆந் திகதியில் விண்ணப்பதாரிகள் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இப்பதவி 3 வருடத்திற்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படும்.

(iii) அரச மொழி அல்லாத மொழி மூலத்தில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள், தகுதிகாண் காலப்பகுதியினுள் அரசாங்க மொழியில் குறித்த தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.

(iv) பொ. நி. சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளின்படி உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியினைப் பெறல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகள், நடைமுறை விதிகள், நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக்கோவையின் நடைமுறை விதிகள் என்பவற்றுக்கு உட்படும்.

4. **வயது**.- விண்ணப்பதாரிகள், விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளபடி 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூபா 30,685 ஆகும் (MN 05-2006A).

6. **எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களில் நடத்தப்படும் :-**

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் | நேரம் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான சராசரிப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | சொற்களாகவும், உருவ வடிவிலும் தரப்பட்டுள்ள சிக்கலான விடயங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் எடுக்கும் தீர்மானங்கள், பதில்களினூடாக அப்பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் கணக்கிடும் நேரம், நேர இடைவெளி என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் என்பன இவ்வினாத்தாளினூடாக பரீட்சிக்கப்படும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது அறிவுப் பரீட்சை | தேசிய, பிராந்திய மற்றும் முழு உலகத்தினையும் உள்ளடக்கியதான பல்வேறு வகையான உலகளாவிய ஒழுங்கமைக்கப்பட்ட சூழலில் மற்றும் எமது சமூகத்தில் உள்ள சமூக கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதாரம் மற்றும் தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பான பொது அறிவு பற்றி விண்ணப்பதாரரின் விழிப்புணர்வு (அறிவு) மற்றும் அறிந்துகொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கு இவ்வினாத்தாள் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. | 3 மணித்தியாலங்கள் | 100 | 40% |

7. **விண்ணப்பதாரியின் அடையாளம்**.- சகல வழிகளிலும் விண்ணப்பப்பத்திரத்தை சரியாகப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பங்கள் 2013.12.06 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் -

செயலாளர்,
(பணிப்பாளர் (நிர்வாகம்) பிரிவு 06),
சுகாதார அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் முடிவில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் முதலாவது பக்கத்தில் 1-7 வரையான பிரிவுகளும் இரண்டாவது பக்கத்தில் 8-10 வரையான பிரிவுகளும் உள்ளடங்கலாக ஏ4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்டு, விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பங்களை தமது சொந்தக் கையெழுத்திலேயே பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "மனநல வைத்திய சமூக சேவையாளர் தரம் II பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபரினால்/சமாதான நீதவான் ஒருவரால்/சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளரால்/சட்டத்தரணியால்/பிரசித்த நொத்தாரிசினால்/முப்படைகளின் ஆணையிடும் அலுவலரால் அல்லது அரசாங்க சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நிரந்தரப் பதவி ஒன்றினை வகிப்பவரும், வருடாந்தம் 2,73,060 அல்லது அதற்கு மேல் திரட்டிய சம்பளமாகப் பெறுபவருமான ஒருவர் பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(உ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 பிரதான அஞ்சல் அலுவலகம், கொழும்பு 10 இற்கு செலுத்தப்படக்கூடியவாறாக "செயலாளர், சுகாதார அமைச்சு, 'சுவசிறிபாய', இல. 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு காசுக் கட்டளையாக செலுத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

(ஊ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவனங்களின் நிறுவனத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எவ்விதமான முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- விண்ணப்பத்தில் உம்மால் வழங்கப்பட்ட விபரங்கள் ஏதேனும் பொய்யானது அல்லது பிழையானது என தெரிவுசெய்யப்படுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் உமது பரீட்சார்த்தி தகைமை இழக்கப்படுவதுடன், பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய வழிமுறைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

* இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமாயின் சிங்கள மொழியில் உள்ள விபரங்களே சரியானதாக மேற்கொள்ளப்படும்.

* இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் சுகாதார செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) வை. டி. நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
கொழும்பு 10,
2013, ஒற்றோபர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின்கீழ் மனநல சமூக சேவையாளர் - தரம் II பதவிக்கான ஆட்சேர்ப்பு (திறந்த)**

வசிக்கும் மாவட்டம் : [ ]                மொழிமூலம் : [ ]

(சிங்களம்-01/தமிழ்-02/ஆங்கிலம்-03)
(பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs/Miss :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதா.- Mr./Mrs/Miss SILVA A.B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி (தனிப்பட்டது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 முகவரி (தனிப்பட்டது) (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 முகவரி (அலுவலகம்) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.4 முகவரி (அலுவலகம்) (சிங்களத்தில்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர் அவர் பணியாற்றும் நிறுவனத்தின் முகவரியை அலுவலக முகவரியாக குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அது உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.2 2013.01.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் : (ஆண்/பெண்) :----.
6. தகைமைகள் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2 இன்கீழ் உள்ள தகைமைகள்) :

* கல்வித் தகைமைகள்/தொழில்சார்/தகைமைகள் :----.
* அனுபவம் :----.

7. பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| |
|---|
| பற்றுச்சீட்டை இங்கே கழராதவாறு ஒட்டவும்.<br>500 ரூபா |

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் விபரங்கள் பிழையானது அல்லது தவறானது என தெரிவுசெய்வதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பம் இரத்தாக்கப்படும் என்றும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தை ......................... ஆந் திகதி என் முன்னிலையில் வைத்துள்ளார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
*(அமைச்சு, மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கு மாத்திரம்)*

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ....................................... இந்தத் திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் ........................... ஆந் திகதியிலிருந்து பணியாற்றுகின்றார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையவருமான/தற்காலிகமான பதவியினை வகிக்கின்றார். அவர் கடந்த .................................. வருட காலப்பகுதியினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும் அவர் ஒழுக்காற்றுத் தண்டனைகள் (எச்சரிக்கை தவிர) எவற்றுக்கும் ஆளாகவில்லை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் இவ் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் இருந்து பரீட்சித்துப் பார்க்கப்பட்டதென்றும் அதன்படி அவ்விபரங்கள் சரியானவை என்றும், அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் ....................................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை இடப்பட வேண்டும்.)
திகதி :----.

*11-236*

**சுகாதார அமைச்சு**

களஃஅலுவலக உத்தியோகத்தர் 2 ஆம் பிரிவு சேவை வகையின் (MN05-2006A) போசணை அலுவலர் (Nutritionist) - தரம் II பதவிக்கு ஆட்சேர்த்தல்

சுகாதார அமைச்சின்கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளுக்கு தரம் II போசணை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு நடைமுறை**.- இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து அமைச்சு செயலாளரினால் அல்லது அமைச்சு செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் நடத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள், அவர்களது உடற்றகுதி மற்றும் தகைமைகள் ஒரு நேர்முகப் பரீட்சையினூடாக பரீட்சிக்கப்பட்ட பின்னர் இப்பதவிக்காக நியமிக்கப்படுவார்கள். (சேர்த்துக்கொள்ளப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை நிலவும் வெற்றிடங்களின் அடிப்படையிலும், அமைச்சின் தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் சுகாதார அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.)

2. **வேண்டப்படும் தகைமைகள்** :

(1) கல்வித் தகைமைகள் :

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டுள்ளதாக முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்த விசேட பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்டுள்ள முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்த பொது விஞ்ஞான இளமாணிப்பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ஆ) உணவு, போசாக்கு தொடர்பில் பட்டப்பின் படிப்பு அல்லது பட்டப்பின் டிப்ளோமா பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட விவசாய விஞ்ஞானத்தில் விசேட (உணவு தொழில்நுட்பம் மற்றும் போஷாக்கு) பட்டம் முதலாம் வகுப்பில் அல்லது இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(iv) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட போஷாக்கு அல்லது உணவு விஞ்ஞானம் பற்றிய விசேட பட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) உடற்றகுதி.- நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றுவதற்கு இயலக்கூடியதாக மன ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சிறந்த முறையில் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

(3) ஏனையவை :

* 2013.01.01 ஆந் திகதியில் விண்ணப்பதாரிகள் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பதாரி நற்பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

3. **ஆட்சேர்ப்பு நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.- (i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள்/ தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ii) இப்பதவி 3 வருடத்திற்கு தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படும்.

(iii) அரச மொழி அல்லாத மொழி மூலத்தில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள், தகுதிகாண் காலப்பகுதியினுள் அரசாங்க மொழியில் குறித்த தேர்ச்சியினைப் பெறுதல் வேண்டும்.

(iv) பொ. நி. சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளின்படி உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியினைப் பெறல் வேண்டும்.

(v) இந்த நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகள், நடைமுறை விதிகள், நிதிப்பிரமாணம் மற்றும் தாபன விதிக்கோவையின் நடைமுறை விதிகள் என்பவற்றுக்கு உட்படும்.

4. **வயது**.- விண்ணப்பதாரிகள், விண்ணப்ப முடிவுத் திகதியில் உள்ளபடி 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூபா 30,685 ஆகும் (MN 05-2006A).

6. **எழுத்துப் பரீட்சை பின்வரும் பாடங்களில் நடத்தப்படும் :-**

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் | நேரம் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தி பெறுவதற்கான சராசரிப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | சொற்களாகவும், உருவ வடிவிலும் தரப்பட்டுள்ள சிக்கலான விடயங்கள் தொடர்பில் பரீட்சார்த்திகள் எடுக்கும் தீர்மானங்கள், பதில்களினூடாக அப்பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் கணக்கிடும் நேரம், நேர இடைவெளி என்பவற்றுக்கிடையிலான தொடர்புகளை கிரகித்துக்கொள்ளும் ஆற்றல் என்பன இவ்வினாத்தாளினூடாக பரீட்சிக்கப்படும். | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. பொது அறிவுப் பரீட்சை | தேசிய, பிராந்திய மற்றும் முழு உலகத்தினையும் உள்ளடக்கியதான பல்வேறு வகையான உலகளாவிய ஒழுங்கமைக்கப்பட்ட சூழலில் மற்றும் எமது சமூகத்தில் உள்ள சமூக கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதாரம் மற்றும் தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பான பொது அறிவு பற்றி விண்ணப்பதாரரின் விழிப்புணர்வு (அறிவு) மற்றும் அறிந்துகொள்ளும் ஆற்றல் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்கு இவ்வினாத்தாள் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது. | 3 மணித்தியாலங்கள் | 100 | 40% |

7. **விண்ணப்பதாரியின் அடையாளம்**.- சகல வழிகளிலும் விண்ணப்பத்தினைச் சரியாகப் பூர்த்திசெய்து சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

8. (அ) விண்ணப்பங்கள் 2013.12.06 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். மேற்கூறப்பட்ட திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
(பணிப்பாளர் (நிர்வாகம்) பிரிவு 06),
சுகாதார அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு 10.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணபத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று இந்த அறிவித்தலின் முடிவில் காட்டப்பட்டுள்ளது. விண்ணபங்கள் முதலாவது பக்கத்தில் 1-7 வரையான பிரிவுகளும் இரண்டாவது பக்கத்தில் 8-10 வரையான பிரிவுகளும் உள்ளடங்கலாக ஏ4 அளவுத் தாளில் தயாரிக்கப்பட்டு, விண்ணபதாரிகள் அவர்களது விண்ணபங்களை தமது சொந்தக் கையெழுத்திலேயே பூர்த்திசெய்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "போசணை அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபரினால்/சமாதான நீதவான் ஒருவரால்/சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளரால்/சட்டத்தரணியால்/பிரசித்த நொத்தாரிசினால்/முப்படைகளின் ஆணையிடும் அலுவலரால் அல்லது அரசாங்க சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட நிரந்தரப் பதவி ஒன்றினை வகிப்பவரும், வருடாந்தம் ரூபா 2,73,060 அல்லது அதற்கு மேல் திரட்டிய சம்பளமாகப் பெறுபவருமான ஒருவர் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியினைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

(உ) ஒவ்வொரு விண்ணபதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 500 பிரதான அஞ்சல் அலுவலகம், கொழும்பு 10 இற்கு செலுத்தப்படக்கூடியவாறாக "செயலாளர், சுகாதார அமைச்சு, 'சுவசிறிபாய', இல. 385, வணக்கத்திற்குரிய பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு காசுக் கட்டளையாக செலுத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.

(ஊ) தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள அலுவலர் தமது விண்ணபங்களை தாம் சேவையாற்றும் நிறுவனங்களின் நிறுவனத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(எ) இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பான எவ்விதமான முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

9. **பிழையான தகவல்களை வழங்குதல்.**- விண்ணபத்தில் உம்மால் வழங்கப்பட்ட விபரங்கள் ஏதேனும் பொய்யானது அல்லது பிழையானது என தெரிவுசெய்யப்படுவதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் உமது பரீட்சார்த்தி தகைமை இழக்கப்படுவதுடன், பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அதற்குரிய வழிமுறைகளுக்கு அமைவாக சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

* இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமாயின் சிங்கள மொழியில் உள்ள விபரங்களே சரியானதாக கொள்ளப்படும்.

* இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழுந்தால் சுகாதார செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

டாக்டர் வை. டி. நிஹால் ஜயதிலக்க,
செயலாளர்.

சுகாதார அமைச்சு,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சின்கீழ் போசணை அலுவலர்** (Nutritionist) - **தரம்** II **பதவிக்கு ஆட்சேர்ப்பு**

வசிக்கும் மாவட்டம் : [ ]    மொழி மூலம் : [ ]

(சிங்களம்-01/தமிழ்-02/ஆங்கிலம்-03)
(பெட்டிக்குள் உரிய இலக்கத்தை இடுக)

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Mr./Mrs/Miss :----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : உ+ம்.- Mr./Mrs/Miss SILVA A.B.
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2. 2.1 முகவரி (தனிப்பட்டது) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 முகவரி (தனிப்பட்டது) (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 முகவரி (அலுவலகம்) (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.4 முகவரி (அலுவலகம்) (சிங்களத்தில்/தமிழில்) :----.

(அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர் அவர் பணியாற்றும் நிறுவனத்தின் முகவரியை அலுவலக முகவரியாக குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் அது உடனடியாக அறிவிக்கப்படல் வேண்டும்.)

3. 3.1 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ]  மாதம் [ | ]  திகதி [ | ]

3.2 2013.01.01 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ]  மாதங்கள் [ | ]  நாட்கள் [ | ]

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பால் : (ஆண்/பெண்) :----.
6. தகைமைகள் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இன்கீழ் உள்ள தகைமைகள்) :

* கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் :----.
* அனுபவம் :----.

7. **பரீட்சைக் கட்டணக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டு பற்றிய விபரம் :**

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

| பற்றுச்சீட்டை இங்கே கழராதவாறு ஒட்டவும்.<br>ரூபா 500 |
|---|

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என கௌரவமாக வெளிப்படுத்துகின்றேன். இதில் உள்ள ஏதேனும் விபரங்கள் பிழையானது அல்லது தவறானது என தெரிவுசெய்வதற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பம் இரத்தாக்கப்படும் என்றும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை தனிப்பட்ட முறையில் நான் நன்கறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தினை ......................... ஆந் திகதி என் முன்னிலையில் வைத்துள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
*(அமைச்சு, மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவர்களுக்கு மாத்திரம்)*

இந்த விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ...................................... இந்தத் திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் ........................... ஆந் திகதியிலிருந்து பணியாற்றுகின்றார். அவர் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையவருமான/தற்காலிகமான பதவியினை வகிக்கின்றார். அவர் கடந்த ................................. வருட காலப்பகுதியினுள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்றும் அவர் ஒழுக்காற்றுத் தண்டனைகள் (எச்சரிக்கை தவிர) எவற்றுக்கும் ஆளாகவில்லை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் இவ் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் இருந்து பரீசித்துப் பார்க்கப்பட்டதென்றும் அதன்படி அவ்விபரங்கள் சரியானவை என்றும், அவர் இப்பதவிக்காக தெரிவுசெய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் ....................................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
திணைக்களம்/நிறுவனம் :----.
(உத்தியோகபூர்வ இலச்சினை இடப்பட வேண்டும்.)
திகதி :----.

11-237

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

புத்தக கட்டுநர் சேவையின் தரம் III பதவிக்கான
ஆட்சேர்ப்பு – 2013

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் புத்தக கட்டுநர் சேவையின் தரம் III பதவிக்காக ஆட்சேர்ப்பதற்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*2. **பரீட்சை**.–* இவ் வர்த்தமானி அறிவித்தலில் 06 வது பந்தியில் அனைத்து தகைமைகளினையும் பூர்த்தி செய்யும் விண்ணப்ப தாரர்களுக்காக தேசிய சுவடிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் தொழிற்தகைமை பிரயோக பரீட்சை 2013ஆண்டு மார்கழி மாதத்தில் 14, 15 ஆந் திகதிகளில் நடாத்தப்படும்.

இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு பதிவாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

*3. **சேவை நிபந்தனைகள்**.–* அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளும், இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக புத்தக கட்டுநர் சேவையின் தரம் III பதவிகட்கு ஆட்சேர்க்கப்படும்.

(I) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானது மாகும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையினை செலுத்துதல் வேண்டும்.

(II) தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச சேவையின் பொது நிபந்தனைகளுக்கும், இற்றைவரை வெளியிடப்பட்ட காலத்திற்குகாலம் வழங்கப்பட்ட கட்டளைகள், ஒழுங்குகள் என்பவற்றிற்கு கட்டுப்படுதல் வேண்டும். இதுவரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்படல் வேண்டும். அவ்வாறே தாபனக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையான பிரிவுகளுக்கும் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடவடிக்கையின் ஒழுங்குமுறையின் 1 ஆவது காண்டத்தின் அத்தியாயத்திற்கும் உட்படல் வேண்டும்.

(III) அரச சேவைக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

(IV) அரச நிருவாக சுற்றுநிருபம் 07/2007 மற்றும் அதற்கு அமைவான சுற்றுநிருபங்களுக்கும் இணங்க உரிய மட்டத்தில் மொழித்தேர்ச்சியினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(V) பதவியில் நியமனம் பெற்று மூன்று வருடங்கள் முடிவதற்கு முன்பதாக பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் தாபனத்தினால் நடாத்தப்படும் பிரயோக பரீட்சை மற்றும் பதிவாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சை ஆகிய பிரிவுகள் இரண்டினையும் உள்ளடக்கிய வினைத்திறன் கான் தடை பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். வயதினை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறன்கான் தடையில் விடுப்பு வழங்கப்பட மாட்டாது.

*4. **சம்பளத் திட்டம்**.–* PL-02-2006(A) ரூபா 12,210-10 x 130-10 x 145-10 x 160-12 x 170-ரூபா 18,600

6/2006(iv) அரசாங்க நிருவாக அமைச்சின் சுற்றுநிருபம்

*5. **வயதெல்லை**.–* வயது 18 வருடங்களுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

*6. **கல்வித் தகைமைகள்**.–* 2013.11.29 ஆந் திகதிக்கு கீழ் காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(I) விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் அனைத்து பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

(II) கல்விப்பொது தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத தடமைவகளில் விசேட சித்திகள் இரண்டு (02) உடன் ஆறு (06) விடயங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(III) புத்தக கட்டுநர் பதவிக்குரிய தொழிற்திறன் ,உயர் மற்றும் தொழிற்தகைமைகள் கல்வி ஆணைக்குழுவின் மூலம் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் உரிய துறையில் தேசிய தொழிற்தகைமை மட்டத்தின் இரண்டாம் மட்டத்தில் (NVQ 2) தொழிற்திறனினை பெற்றிருத்தல்.

(IV) புத்தகங் கட்டுதல் நடவடிக்கையினை மேற்கொள்ளும் நிறுவனத்தில் புத்தகங் கட்டுதல் தொடர்பாக குறைந்தது ஒரு வருடகால அனுபவத்தினை பெற்றிருத்தல்.

**7. சேர்துக்கொள்ளப்படும் முறை :**

7.1 விண்ணப்பத்தினை கோரி தகைமைகளினை உடைய விண்ணப்பதாரர்கள் தேசிய சுவடிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் நடாத்தப்படும் தொழிற்தகைமை பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். இப்பரீட்சையில் சித்தி பெறுவதற்காக 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக புள்ளிகளைப் பெறல் வேண்டும். ( பரீட்சை முறைமைக்காக 15 வது பிரிவினை பார்க்க.)

7.2 மேற்படி பரீட்சையில் சித்திபெறும் விண்ணப்பதாரர்கள் பதிவாளர் நாயகம் மூலம் அல்லது அவர் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை சபையின் மூலம் நடாத்தப்படும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக உட்படுத்தப்படுவர். இவ் ஒழுங்குமுறைமைப் படுத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையில் சித்தியடைவதற்காக 40% அல்லது அதற்கு மேற்பட்டதாக புள்ளிகளைப் பெறல் வேண்டும்.

7.3 மேற்படி ஒழுங்குமுறைமைப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்திப்பெறக்கூடிய புள்ளிகளைப்பெற்ற விண்ணப்பதாரிகள், புத்தக கட்டுநர் பதவியின் வெற்றிட எண்ணிக்கையின் பேரில் சேர்த்துக்கொள்ளல் இடம்பெறும்.

*8. **பரீட்சைக் கட்டணங்கள்**.–* பரீட்சைக்கட்டணம் ரூபா 750 ஆகும். இப்பரீட்சைக்கட்டணம் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி

திகதிக்கு முன்னதாக இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் பதிவாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 7041650 ன் கீழ் வைப்பிலிட்டு விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். எவ்வித காரணங்களுக்காகவும் இப்பரீட்சைக் கட்டணம் திருப்பி செலுத்தப்படாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானது.

9. **விண்ணப்பிக்கும் முறை:**

9.1 விண்ணப்பபத்திரமானது இவ் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடவும்.

9.2 விண்ணப்பப்படிவம் ஏ4 (செ.மீ 24 x 29) அளவுடைய கடதாசி யின் இரு பக்கத்தினையும் உபயோகித்து தயாரித்தல் வேண்டும்.

9.3 மாதிரி விண்ணப்பப்படிவத்தின் விடயங்கள் 1 தொடக்கம் 06 வரையான பந்திகள் முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் உள்ளடங்கியதாக தயாரிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

9.4 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப் படிவங்கள், பூரணமற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும். அவ்வாறே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரர் விசாரித்து அறிந்துக்கொள்வதோடு, அவ்வாறு இன்றிறேல் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக்கொள்ளல் பிரயோசன மானது.

9.5 விண்ணப்பத்தினை பூரணப்படுத்தல், விண்ணப்பதாரர் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெற்ற மொழியிலேயே இருத்தல் வேண்டும்.

9.6 விண்ணப்பப்படிவங்கள் இடப்பட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "புத்தக கட்டுநர் சேவையின் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு – 2013" என தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

9.7 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2013.11.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு கீழ்க்காணப்படும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப் படல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது :-

பதிவாளர் நாயகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்.
இல.234/A3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.

9.8 அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை, தங்களது திணைக்கள தலைவரினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

9.9 அனைத்து வகைகளிலும் பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் இடுகையில் விண்ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் சம்பந்தமாக செய்யப்படும் எந்தவொரு முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9.10 விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. உரிய பரீட்சைக் கட்டணத்தினை செலுத்தி, உரிய விதத்தில் விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்பதாரர் களுக்கும் அனுமதி அட்டைகள், பதிவாளர் நாயகத்தினால் தபால் மூலம் அனுப்பப்படும். அத்துடன் அது பற்றிய அறிவித்தல் பத்திகை அறிவித்தல் பத்திரிகைகளில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அது பற்றி பதிவாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணத்தினை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதிகளுடன், பதிவுத் தபாலின் பற்றுச் சீட்டினையும் கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசமாயின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு தங்களது வேண்டுகோள் கடிதத்தை பதிவாளர் நாயகம் திணைக் களத்திற்கு அனுப்புதல் கூடிய பொருத்தமானதாகும்.

10. **பரீட்சை நிலையத்திற்குள் உட்புகுதல்.**- (I) பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை நிலையத்தின் நிர்வாகியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையினை சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்கு தோற்ற அனுமதியளிக்கப் படமாட்டாது.

(II) அனைத்து பரீட்சார்த்திகளும் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சையாளர்களால் கடைப்பிடிக்க வேண்டிய பொது சட்டத்திட்டங்களுக்கு உட்படல் வேண்டும்.

(III) பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்கல், அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவராக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக கருதப்படக்கூடாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- தான் தோற்றும் அனைத்து பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நிலைய நிருவாகி திருப்திப்படும் விதத்தில் தனது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். அது சம்பந்தமாக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை

II. வழங்கப்பட்ட திகதி, பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு 03 வருடங்களுக்கு மேற்படாதவாறாக செல்லுப்படியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

*12.* **உண்மைக்கு புறம்பான தகவல்களை வழங்குதல்.**- (அ) பரீட்சையாளர் தகைமையற்றவராக தெளிவாகினால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியில் அல்லது பரீட்சைக்கு பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சாத்தி தகைமை இரத்து செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரரினால் வழங்கப்படும் தகவல்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் உண்மைக்கு புறம்பானவை என தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படல் முடியும்.

(ஆ) பரீட்சை நடாத்தப்படல் சம்பந்தமாக பதிவாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சாத்தி உட்படல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பதிவாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு அவருக்கு கட்டுப்படல் வேண்டும்.

*13.* இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியில் உள்ளதுடன் ஏதாவது பிரதிகூலம் அல்லது குறைப்பாடு ஏற்படுமாயின், அதன் போது சிங்கள மொழிமூலம் அதிகாரம் செலுத்தும்.

*14.* இவ் ஒழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் சம்பந்தமாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

*15.* **பரீட்சை நடைமுறைகள்.**- (I) *மொழிமூலம் :-*

(அ) சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) தனது விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்ப தாரருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

(II) *பாட விதானம் :*

| வினாத்தாளின் பெயர் | விடய பரப்பு | காலம் |
|---|---|---|
| புத்தக கட்டுநர் பதவிக்கு சேர்த்துக் கொள்ளப் படுவதற்கான பிரயோக பரீட்சை | (i) கடதாசி மற்றும் புத்தகங்களின் தன்மை பரிசீலனை பற்றிய அறிவினை பரிசீலனை செய்தல். | 02 மணித்தியாலங்கள் |
| | (ii) ஆவண பாதுகாப்பின் போது கடைப் பிடிக்க வேண்டிய நடைமுறைபற்றிய அறிவினை பரிசீலனை செய்தல். | |
| | (iii) ஆவண பாது காப்பின் போது உபயோகிக்கும் திரவியங்கள் மற்றும் உபகர ணங்களினை அடையாளங் காணல் மற்றும் பாவனை பற்றிய அறிவினை பரிசீலனை செய்தல் | |

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/A3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை,
பத்தரமுல்லை.
2013, நவெம்பர் 08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

*புத்தக கட்டுநர் சேவையின் தரம் III பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2013*

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம் [ ]

பரீட்சைக்கு தோற்றுவதற்கான மொழி மூலம் : [ ]
(சிங்களம் 2/தமிழ் 3)
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1\. 1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம்.- SILVA A.B

1.2 முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2\. முழு முகவரி:-

2.1 நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்துக் களில்) :----.

2.2 நிரந்தர வதிவிட மாவட்டம்:-

2.3 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில கெபிட்டல் எழுத்துக்களில்) :----.

3\. பால் : பெண் - 1, ஆண் - 0 [ ]
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

4\. விவாகமானவரா/விவாகமாகாதவரா : [ ]
விவாகமானவர் - 1 விவாகமாகாதவர் - 2
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

5. அடையாள அட்டை இலக்கம்:-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. (i) பிறந்த திகதி :-

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2013.11.29 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. கல்வித் தகைமைகள் :

கல்விப் பொது தராதரப் பத்திர (சாதாரண தரம்) :

(i) பரீட்சையின் வருடம் மற்றும் மாதம் :-
(ii) பரீட்சை சுட்டெண்:-
(iii) பெறுபேறுகள்:

| விடயம் | தரம் | விடயம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

8. புத்தகங் கட்டுநர் பற்றிய தகைமைகள் :

(வர்த்தமானி அறிவித்தலில் 6-III பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் அல்லது அதற்கு மேலதிமான தகைமைகளினை பெற்றிருத்தல் வேண்டும்.)

9. புத்தகங் கட்டுநர் பற்றிய அனுபவம் :

(வர்த்தமானி அறிவித்தலில் 6-IV பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் அல்லது அதற்கு மேலதிமான தகைமைகளினை பெற்றிருத்தல் வேண்டும்.)

10. வேறு தகைமைகள் :----.

11. கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டு பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :----.
(ii) பற்றுச் சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய கட்டணம் :----.

| கழற்ற முடியாதவாறு பணப் பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும். |
|---|

12. தாங்கள் எப்பொழுதாவது ஏதாவது குற்றத்திற்காக நீதிமன் றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (பொருத்தமான கூட்டினுள் '✓' என்ற அடையாளத்தை இடுக)

ஆம் ☐ இல்லை ☐

13. **விண்ணப்பதாரரது உறுதியுரை**.- இவ் விண்ணப்பப்படிவத் தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிமொழிகின்றேன். பரீட்சைக்கட்டணம் செலுத்திய இலக்கம் --------. மற்றும் ------- திகதிய பற்றுச்சீட்டினை இதில் இணைத்துள்ளதாக பிரதிக்கினை செய்கின்றேன். பதிவாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கிணங்க செயலாற்றுவதற்கும், இப்பரீட்சை சம்பந்தமான நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகைமையற்றவர் என தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சார்த்தி தகைமை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும், நியமனம் பெற்ற பின்னர் தெளிவாயின், நான் இழப்பீடின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவ தற்கும் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :----.

(தற்பொழுது அரச சேவையில் உள்ள நபர்களுக்காக)

**திணைக்களத்தின் /நிறுவன தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி .............................. ஆந் திகதி தொடக்கம் இந்த அலுவலகத்தில் கடமையாற்றுகின்றார் எனவும் அவரின் கடமை மற்றும் நடத்தை எப்பொழுதும் திருப்திகரமானது எனவும் மேற்குறிப்பிடப்பட்ட விபரங்கள் அனைத்தும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கையுடன் தொடர்புபடுத்தி நான் தனிப்பட்ட விதத்தில் பரிசீலனை செய்து பார்த்தாகவும் அவை சரியானவை எனவும் 2013 ...................... ஆம் மாதம் ............................ ஆந் திகதி அவர் என் முன்னிலையில் ஒப்பமிட்டதாக இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத்தின்/நிறுவன தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

11-359

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிவிவகார அமைச்சு

இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பணியாட்டொகுதியிலிருந்து வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2013(2014)

Competitive Examination for Filling Vacancies in the Public Management Assistants' Service Cadre in Sri Lanka Missions Abroad- 2013(2014)

இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகங்களில் ஏற்பட்டுள்ள உள்ளூர் மட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதி பெறும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பணியாட்டொகுதியிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெளிவிவகார அமைச்சின் சார்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் மாச்சு 2014 இல் நடாத்தப்படவுள்ள போட்டிப் பரீட்சைக்கு இவ்விண்ணப்ப தாரர்கள் தோற்ற வேண்டும்.

2. **தகைமை**.- விண்ணப்பதாரர் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பத் திகதியன்று விண்ணப்பதாரர் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண சபை, அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, அல்லது உள்ளூராட்சி சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்தவராக அல்லது அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, உள்ளூராட்சி சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு II இல் 5 வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது குறிப்பிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி மற்றும் சேவை நிலையம் என்பனவே பரீட்சை சம்பந்தமான சகல விடயங்களிலும் பிரயோகிக்கப் படுவதுடன் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது;

**குறிப்பு**.- மேலே குறிப்பிடப்பட்ட சேவைகளிலல்லாத பிற முகாமைத்துவ உதவியாளர் சேவைகளிலிருந்து விண்ணப்பம் செய்வதற்குத் தகுதியற்றவராவர்.

(இ) விண்ணப்பம் முடிவடையும் திகதியன்று 56 வயதுக்குட்பட்ட வராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பத் திகதியன்று மேலே (அ) இன் கீழே குறிப்பிடப் பட்ட சேவைகளின் வகுப்பு II இன் I வினைத்திறன்காண் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் ;

(உ) விண்ணப்பம் செய்யும் காலப்பகுதிக்கு முன்னைய ஐந்து வருட காலத்தில் அவ் அவ்வருடத்திற்குரிய சம்பள ஏற்றங்களை உரிய திகதியில் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ஊ) எச்சரிக்கை தவிர்த்து, ஒழுக்காற்றுத் தண்டனைகள் எதுவும் பெறாதவராக இருத்தல் வேண்டும் ;

**குறிப்பு** I : தற்பொழுது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் சேவையாற்றுவோர் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.

**குறிப்பு** II : விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் போது தகைமை உள்ளாரெனினும் அதன் பின் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாணசபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை வகுப்பு/தரம் I இற்கு மேலான ஒரு சேவைக்கு பதவியேற்றம் செய்யப்பட்டாலோ அல்லது வேறொரு சேவைக்கு மாற்றப்பட்டாலோ இலங்கை தூதரகங்களுக்கு உள்நாட்டு சேவையால் நிரப்பப்படவுள்ள முகாமைத்துவ உதவி யாளர் சேவைக்கு நியமனம் பெற தகுதியற்றவராவர். அப்படி ஏற்படும் சாத்தியக் கூறுகள் இருப்பின் அது இப்பகுதி (அ) வின் பிரகாரம் தாக்கம் ஏற்படலாமாகையால் இதையிட்டு வெளிவிவகார அமைச்சு செயலாளருக்கு அறிவித்தல் கொடுப்பது விண்ணப்பதாரரின் கடமை யாகும்.

**குறிப்பு** III : நிர்வாகம் மற்றும் கணக்கீட்டு அறிவாற்றல் உள்ளவர்க்கும் ஆங்கிலம் மற்றும் வேறு மொழிகளில் திறனாற்றல் உள்ளவர்க்கும் (எழுத்தும் கதைத்தலும்) முன்னுரிமை வழங்கப்படும். வேலை பார்க்கக் கூடியளவு வெளிநாட்டு மொழிகள் தெரிந்திருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**குறிப்பு** IV : கணினி அறிவு ஒரு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் என்பதுடன் அத்தகைமை பெற்றமையின் திறமைப்பாடுகள் பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

3. **தேர்வு முறை**.- பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மூலமும் வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலமும் தேர்வு நடைபெறும். இப்பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடத்துதல், பெறுபேருகளை வழங்குதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானதாகும்.

3.1 எழுத்து மூலப் பரீட்சை.– கீழே தரப்பட்டுள்ள எழுத்து மூலப் பாடங்கள் ஒவ்வொன்றும் தலா 100 புள்ளிகளைக் கொண்டிருக்கும் :-

| வினாத்தாள் இலக்கம் | வினாத்தாள் | காலப்பகுதி |
|---|---|---|
| 01 | கணக்கீட்டு முறைகள் | 2 மணித்தியாலம் |
| 02 | தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறை | 2 மணித்தியாலம் |
| 03 | ஆங்கிலம் | 2 மணித்தியாலம் |
| 04 | பொது அறிவு | 1 மணித்தியாலம் |

**குறிப்பு** :

(1) கணக்கீடு.- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப் படும் கணக்கு முறைகள், கணக்குத் தொடர்பான அறிவும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(2) தாபன விதிமுறைகளும் அலுவலக நடைமுறைகளும்.- அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அலுவலக முறைகள் தொடர்பான அறிவையும் அவ்வறிவை செய்முறையில் பயன்படுத்தும் திறன் என்பவற்றை அளவிடுதலை இவ்வினாத்தாள் கொண்டிருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(3) ஆங்கிலம்.- விண்ணப்பதாரரின் ஆங்கில புரிந்துணர்வு மற்றும் எழுத்து மூல தொடர்பாடல் என்பவற்றைப் பரீட்சிப்பதாக இவ்வினாத்தாள் அமைந்திருக்கும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்பட வேண்டும்.

(4) பொது அறிவு.– இலங்கையின் அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரப் பின்புலம், வரலாறு மற்றும் புவியியல் உட்பட நிகழ்கால சர்வதேச விவகாரங்கள் தொடர்பான பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடையளிக்கும் வகையிலான மாதிரி வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டியிருக்கும்.

3.2 நேர்முகப் பரீட்சை:

3.2.1 நேர்முகப் பரீட்சைக்குரிய புள்ளிகள் 100 என்பதுடன் நேர்முகப் பரீட்சையானது வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும்.

3.2.2 விண்ணப்பதாரர் ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 40 புள்ளிகள் பெற வேண்டியதுடன் மொத்தப் புள்ளிகள் 200 அல்லது அதற்கு மேலாக பெறுபவர்களே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அழைக்கப்படுவர்.

3.2.3 மேலுள்ள 3.2.2 பந்திக்கு ஏற்ப தகைமைகளைப் பூர்த்தி செய்யும் அனைத்துப் பரீட்சார்த்திகளது நேர்முகப் பரீட்சைக்கான அகர வரிசையில் தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கான புள்ளிகள் கிடைக்கப் பெற்றதுடன் எழுத்து மூலம் மற்றும் நேர்முகப் பரீட்சைகள் மூலம் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளை மையப்படுத்திய திறமை அடிப்படையிலான பெறுபேற்றுப் படிவம் வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பெறுபேற்றின் ஒரு படிவம் அனுப்பி வைக்கப்படும்.

**4. பதவிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 இப்பரீட்சைகளின் பெறுபேறுகள் மூலம் தெரிவாகும் உத்தியோகத்தர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிட்ட ஒரு வருட காலத்திற்கு கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். இச்சேவைக் காலத்தில் அவரது வேலை மற்றும் நல்லொழுக்கம் என்பன சார்பாக அதிருப்தி காணுமிடத்து அவரது தெரிவு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு.

4.2 அந்தந்த தூதரகங்களின் தேவைகளைப் பொறுத்து உத்தியோகத்தரின் தகைமை (வெளிநாட்டு மொழி என்பன) மற்றும் திறமை ஆகியவற்றினைப் பொறுத்து நியமனம் வழங்கப்படும். இப்படியான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் போது உத்தியோகத்தரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் முறைப்பாடுகளையிட்டு (பிள்ளைகளின் கல்வி போன்ற) கவனிக்க அமைச்சிற்கு எதுவித கடப்பாடும் இல்லை என்பதுடன் உத்தியோகத்தர் உலகின் எந்ததூதரகத்திற்கு நியமிக்கப்பட்டாலும் அத்தூதரகத்திற்கு கடமையின் பொருட்டு அவர் சமூகமளிக்க வேண்டும்.

4.3 வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் விதிக்கப்படும் விதிகள், நிபந்தனைகளுக்கமைய சாதாரணமாக மூன்று வருடங்கள் வெளிநாட்டில் சேவையாற்ற வழமையாக கோரப்படுவதுடன் அதற்குரிய ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும். இக்காலவரை முடிவுற்றதும் உத்தியோகத்தர் இலங்கைக்கு திரும்பி வரவேண்டும்.

4.4 இலங்கை வெளிநாட்டு தூதரகங்களுக்கு தெரிவாகும் உத்தியோகத்தர்கள் இலங்கையின் சேவையாற்றும் போது அவர்கள் கொழும்பிலேயே பெறும் நிரந்தர சம்பளத்தை தொடர்ந்து பெறுவார்கள். வெளிநாட்டில் சேவை செய்யும் காலத்தில் வெளிநாட்டுக்கான பணிக் கொடுப்பனவு ஒன்றும் பெறுவர்.

4.5 உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டதும் தெரிவு செய்யப்பட்டவரினது வெளிநாட்டுச் சேவைக்காலத்தில் அவரினது, அவரினது வாழ்க்கைத் துணையினது மற்றும் அவரில் தங்கியுள்ள 21 வயதிற்குக் குறைவான இரு பிள்ளைகளுக்கு மட்டும் நியமனம் பெறும் நாட்டிற்குச் செல்வதற்கான மற்றும் திரும்பி வருவதற்கான போக்குவரத்துச் செலவுகள், அங்கு தங்கமிடச் செலவுகள் மற்றும் பிற சலுகைகள் வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்பட்டபடி அரசாங்கம் பொறுப்பேற்கும்.

**5. விண்ணப்பிக்கும் முறை :**

5.1 விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை ஏ-4 அளவிலான கடதாசியில் மூன்று பக்கங்களில் முறையே 01 தொடக்கம் 05 வரை முதலாம் பக்கத்திலும் 06 தொடக்கம் 14 வரை இரண்டாம் பக்கத்திலும் மற்றும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் தயாரிக்கப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி தயாரிக்கப்படாத மற்றும் தேவைப்படும் தகவல்கள் சரியாகக் கொடுக்கப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களின் படப்பிரதி களை வைத்திருத்தல் உசிதமானது என விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

5.2 சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் விண்ணப்பத்தைத் தயாரிக்கும் விண்ணப்பதாரர்கள் சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக பரீட்சையின் பெயரை ஆங்கில மொழியிலும் குறிப்பிடல் வேண்டும்.

5.3 விண்ணப்பங்களை விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்ப வேண்டும். அதில் திணைக் களத் தலைவர்கள் விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவையாற்றுவதற்குத் தகுதியுள்ளவரா என்பதுடன்

விண்ணப்பத்தில் கூறியிருப்பவை உண்மையானவை என்பதையும் அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவாகும் பட்சத்தில் அவரை தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியும் என்பதாகவும் உறுதிப்படுத்த வேண்டும்.

5.4 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு 02.12.2013 திகதி அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அத்துடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் தேர்வுக்கான பரீட்சை' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இக்கட்டணம் எந்தவொரு தபால் நிலையத்திலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 என்ற கணக்கிற்கு செலுத்தப்பட்டு பெறும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் ஒட்டப்பட வேண்டும். பற்றுச் சீட்டு இலக்கம், திகதி, தொகை மற்றும் செலுத்தப்பட்ட அஞ்சல் அலுவலகம் என்பன விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் குறிப்பிடப்பட வேண்டும். பரீட்சைக்கான கட்டணம் வேறு விதிகளில் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டோ அல்லது தபால் / காசோலைகளோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச் சீட்டின் படப்பிரதி ஒன்றை வைத்திருத்தல் சாலச் சிறந்தது. பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

7. பூர்த்தி பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தவறி விட்டது அல்லது தாமதமாகி விட்டதுதென்பதான குற்றச்சாட்டுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **பரீட்சைக்கு அனுமதித்தல் :**

8.1 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

8.2 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற அனைவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்பி வைப்பார். பரீட்சைக்கு சமூகமளிக்கும் பரீட்சார்த்தி கையொப்பமிட்டு உறுதி செய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்படமாட்டார். அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதும் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைத்ததற்கான அறிவித்தலொன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரகாரம் விண்ணப்பதாரிகள் எவருக்காவது பத்திரிகை அறிவித்தலின் பின் 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவிடத்து அது பற்றி பரீட்சைத் திணைக் களத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

நீங்கள் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தின், பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் நிழற் பிரதிகளையும் விண்ணப்பப்படிவத்தைப் பதிவுத் தபாலில் அனுப்பியமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினையும் சேர்த்து உங்களது முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் ஆகியவற்றுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்குச் சென்று விசாரிப்பது பொருத்தமானதாகும். நீங்கள் கொழும்பிற்கு வெளியில் வசிக்கும் விண்ணப்பதாரியாயின் தொலைநகல் மூலம் உமக்குரிய அனுமதி அட்டையை அனுப்பி வைக்குமுகமாக உமது மேற்குறிப்பிட்ட தகவல்களுடன் உமது தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட ஒரு வேண்டுகோற் கடிதத்தை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் மூலம் அனுப்பி விடயங்களை அறிந்து கொள்வது மிகவும் பயனுள்ளதாய் அமையும்.

8.3 பரீட்சைக்கு சமூகமளிக்கும் பரீட்சார்த்தியொருவர் கையொப்பமிட்டு உறுதிசெய்யப்பட்ட தனது அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டையைச் சமார்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்.

8.4 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சையை எழுத வேண்டும். பரீட்சார்த்தி தான் பரீட்சை எழுதும் முதல் நாளன்று தனது அனுமதி அட்டையைப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்குக் கட்டுப்படுவர். இவைகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக இடமுண்டு.

பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் அவர்களின் தீர்மானமே இறுதியானதாகும்.

8.5 பரீட்சைக்கான அனுமதிச்சீட்டை விண்ணப்பத்தாரருக்கு வழங்குவதன் மூலம் பரீட்ச்சார்த்தி பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பெற்றுள்ளார் என்னும் கருத்துக் கொள்ளப்படலாகாது.

9. **பரீட்சையின் மொழி மூலம் :**

9.1 பரீட்சை சிங்களம் / தமிழ் / ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சை எழுதும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

9.1 ஒரு பரீட்சார்த்தி ஆங்கில வினாத்தாளைத் தவிர்த்து மற்றைய எல்லாப் பாடங்களையும் ஒரே மொழியிலேயே எழுத வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குகின்றமைக்கான தண்டனை :**

10.1 பரீட்சார்த்தி ஒருவர் தனது அறிவின்படி சமர்ப்பித்த ஏதாவது விபரங்கள் தவறானது என்று கண்டுபிடிக்கப்படுமிடத்து அல்லது வேண்டுமென்றே ஏதாவது தேவைப்படும் தகவலை மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளதுடன் இதன் காரணமாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் தகுதியற்றவராவார்.

10.2 பரீட்சார்த்தி ஒருவர் எச்சந்தர்ப்பத்திலாவது பரீட்சைக்கு முன்போ பரீட்சை நடக்கும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ தகுதியற்றவர் எனக் காணப்படுமிடத்து அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அனுமதி அட்டை வழங்குதல் என்பது ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றத் தகுதி பெற்றவர் என்பதாக அமையாது.

11. **பரீட்சார்த்தியின் ஆளடையாள அத்தாட்சி** :

11.1 ஒரு பரீட்சார்த்தி தனது பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தனது அடையாளத்தை அவர் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் நிரூபிக்கும்படி வேண்டப்படுவர். அதற்கமைய கீழே தரப்படும் ஏதாவதொரு அடையாளச் சான்று போதுமானதாகும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

12. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக வெளிவிவகார அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதியானதாகும்.

கருணாதிலக அமுனுகம,
செயலாளர்,
வெளிவிவகார அமைச்சு.

வெளிவிவகார அமைச்சு,
'குடியரசுக் கட்டிடம்'
த.பெ. இல. 583,
கொழும்பு 01,
25.10.2013.

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை பணியாட்டொகுதிகளின் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய விண்ணப்பம் - 2013(2014)

## Application for the Competitive Examination for Filling Vacancies in the Public Management Assistants' Service Cadre in Sri Lanka Missions Abroad – 2013(2014)

பகுதி அ

அலுவலக உபயோகத்திற்கு

தாங்கள் உரித்துடைய சேவை :
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை - 1
மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை - 2
உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை - 3
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)

பரீட்சார்த்தி பரீட்சை எழுத விரும்பும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)

1. பெயர் :
1.1 முதல் எழுத்துக்களுடன் பெயர்: (திரு./ திருமதி/ செல்வி) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உதாரணம் : சில்வா எம். ஏ.
1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் / தமிழில்) :----.

2. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.)
2.1 நிரந்தர முகவரி :----.
2.2 (சிங்களத்தில் / தமிழில்) :----.
தொலைபேசி இல :----.
2.3 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
தொலைபேசி இல :----.

3. 3.1 பால் :
பெண் -1
ஆண் -0
(உரிய இலக்கத்தைப் பெட்டிக்குள் குறிப்பிடவும்)

3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

3.3 பிறந்த திகதி :
வருடம் மாதம் திகதி

3.4 விண்ணப்ப முடிவு திகதியன்று வயது:
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4. சேவை :
4.1 அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை / மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை / உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை (அவசியமற்றவற்றை கீறி விடவும்) :----.

4.2 அரசாங்க சேவை / மாகாண சபை அரச சேவை /உள்ளூராட்சி அரச சேவை முதல் நியமனத் திகதி மற்றும் சேவையில் சேர்ந்த மொழி (அவசியமற்றவற்றை கீறி விடவும்) :----.

5. 5.1 சிவில் அந்தஸ்து :
திருமணமானவரா /திருமணமாகாதவரா :
(திருமணமானவராயின் 2,
திருமணமாகாதவராயின் 1)
(உரிய இலக்கத்தை பெட்டிக்குள் இடவும்)
5.2 திருமணமானவராயின் பிள்ளைகளின் எண்ணிக்கை, பிறந்த திகதி, அவர்களின் வயது:----.

6. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் விபரம் தரவும் :----.
7. கல்வித் தகைமைகள் (மொழி மூல விபரத்துடன்) :----.
8. உயர்வு பெற்ற திகதி :
8.1 வகுப்பு II :
வகுப்பு IIஇல் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை பூர்த்தி செய்த திகதி :
8.2 வகுப்பு I :
8.3 விண்ணப்பதாரர் தற்பொழுது சேவையில் இருக்கும் வகுப்பு மற்றும் அதற்கு நியமனம் பெற்ற திகதி :----.

9. தற்போதைய வருடாந்த சம்பளம் :----.

10. அனுபவ அறிவு : (வருடங்கள் குறிப்பிடுக) :----.
10.1 கணக்கீடு :----.
10.2 தாபன விதிமுறைகள் :----.

11. மொழித் தேர்ச்சி :

| | வாசிப்பு | எழுத்து | பேச்சு |
|---|---|---|---|
| (அ) சிங்கள மொழி<br>(ஆ) தமிழ் மொழி<br>(இ) ஆங்கில மொழி<br>(ஈ) வேறு பிற நாட்டு மொழி | | | |

12. திறமை :
12.1 தட்டெழுத்து (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) :----.
12.2 கணனி அறிவு (விபரம் தரவும்) :----.

13. விண்ணப்பதாரர் இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் முன்னர் சேவையாற்றியிருந்தால் திகதிகளுடன் தூதரகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக : ................................

14. பிற தகைமைகள் ஏதும் :----.

பரீட்சைக்கான கட்டணம் மாவட்ட பிரதேச செயலகத்தில் செலுத்தப்பட்ட போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு கீழே உள்ள கூட்டிற்குள் ஒட்டப்பட வேண்டும் (பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றை வைத்திருக்கவும்.)

| |
|---|
| |

1. பற்றுச் சீட்டு இலக்கம் :----.
2. தபால் நிலையம் :----.
3. திகதி :----.
4. தொகை :----.

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

02.12.2013 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலத்திற்கான சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளேன் என்றும் எச்சரிக்கை தவிர்ந்த எதுவித ஒழுக்காற்று தண்டனையையும் பெறவில்லை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் எனது அறிவுக்கெட்டியவரையில் இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப் பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். கொடுக்கப்பட்டுள்ள தகவல் ஏதாவது பரீட்சைக்கு முன்போ, பரீட்சையின் போதோ அல்லது பின்போ தவறானது எனக் காணப்படுமிடத்து எனது விண்ணப் பத்தை அல்லது நியமனத்தை இரத்துச் செய்யக்கோரும் அதிகாரம் வெளிவிவகார அமைச்சு செயலாளருக்கு உண்டு.

பரீட்சையின் சட்ட திட்டங்களுக்கமைந்து நான் செயற்படுவேன் என்றும், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சைக்கு பின்னரோ நான் தகுதியற்றவராகக் காணப்படுமிடத்து நான் பரீட்சையின் சட்டப்பிரமாண தீர்ப்புக்கமைந்து நடப்பேன் என்றும் உடன்படு கிறேன். நான் மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை சம்பந்தமான சட்ட திட்டங்களுக்கு அமைந்து ஒழுகுவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

மேலும் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் சட்டதிட்டங் களுக்கும், பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக அவரால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்பட்டு நடப்பேன் என உறுதியளிக்கிறேன்

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

பகுதி – ஆ

**திணைக்கள தலைவரின் சான்றிதழ்**

(திணைக்களத் தலைவரால் நிரப்பப்படல் வேண்டும்)

வகுப்பு I / வகுப்பு II / அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை / உள்ளூராட்சி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் உள்ள திரு. / திருமதி / செல்வி ........................................... என்பவர்,

(அ) 02.12.2013 ஆம் திகதிக்கு முன்னரான 5 வருடங்களில் தனது சம்பள உயர்வுகள் அனைத்தையும் பெற்றுள்ளார் என்பதை யும் :

(ஆ) 02.12.2013 ஆம் திகதிக்கு முந்திய 5 வருட காலப்பகுதியில் எத்தகைய ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகவில்லை என்பதையும் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்பதை இத்தால் சான்றுபடுத்துகிறேன். பரீட்சைக்குரிய உரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அதற்குரிய பற்றுச் சீட்டு இதனுடன் இணைக்கப்பட் டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

**சிபார்சு செய்தல் :**

(I) விண்ணப்பதாரர் வெளிநாட்டு தூதரகங்களில் சேவை செய்வதற்குரிய தகைமை :----.

(II) விண்ணப்பதாரர் தெரிவாகுமிடத்து அவரைத் தற்போதைய சேவையிலிருந்து தவறாது விடுவிக்க முடியுமா முடியாதா என்பது :----.

----,
திணைக்களத்தலைவரின் கையொப்பமும்,
பதவி முத்திரையும்.

பதவி :----.
திகதி :----.

11-361

---

### வெளிவிவகார அமைச்சு

இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் உள்ளூர் தேர்வு அடிப்படையில் பிரத்தியேக உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2013 (2014)

LIMITED COMPETITIVE EXAMINATION FOR FILLING VACANCIES IN THE HOME BASED PERSONAL ASSISTANT'S POSTS IN SRI LANKA MISSIONS ABROAD - 2013 (2014)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை, மாகாண அரச சேவை மற்றும் உள்ளூராட்சி அரச சேவை மற்றும் கூட்டுத்தாபனங்கள்/ அரச வங்கிகள் மற்றும் நியதிச்சட்ட முறையான சபைகள் போன்ற ஓரளவு

அரசாங்க சார்புடைய தாபனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆங்கில சுருக்கெழுத்தும் கணிணி பிரயோக ஆற்றலும் உடையவர்களிடமிருந்து இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்நாட்டு தேர்வு அடிப்படையில் பிரத்தியேக உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பு வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. தகைமை.-** (அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டு மென்பதுடன் விண்ணப்பதாரர் திருமணமானவராயின் அவரது வாழ்க்கைத் துணையும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்ப முடிவு திகதியன்று அரச முகாமை உதவியாளர் சேவை, மாகாண அரச சேவை மற்றும் உள்ளூராட்சி அரச சேவையில் உள்ளவர்கள் 56 வயதிற்கு மேற்படாமலும் ஆங்கில சுருக்கெழுத்து மற்றும் கணிணிப் பிரயோகத்தில் ஆகக் குறைந்தது 5 வருட காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும்.

(இ) விண்ணப்ப முடிவு திகதியன்று கூட்டுத்தாபனங்கள், அரச வங்கிகள் மற்றும் நியதிச்சட்ட முறையான சபைகள் போன்ற ஓரளவு அரசாங்க சார்புடைய தாபனங்களில் சேவையில் உள்ளவர்கள் 55 வயதிற்கு மேற்படாமலும் ஆங்கில சுருக்கெழுத்து மற்றும் கணிணிப் பிரயோகத்தில் ஆகக் குறைந்தது 5 வருட காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும்.

**குறிப்பு.-** (1) தற்பொழுது இலங்கை தூதரகங்களில் பணிபுரிப வர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவராவர்.

(2) இலங்கைத் தூதரகங்களில் முன்னர் பணிபுரிந்தவர்கள் ஆனால் தற்போது திரும்பி வந்துள்ளவர்கள் பரீட்சைக்குத் தோற்றலாம். எனினும் இலங்கைக்குத் திரும்பி வந்து ஆகக் குறைந்தது 12 மாதங்கள் இலங்கையில் தங்கியிருந்திருப்பின் அதன் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும்.

(3) ஒப்பந்த, அமய அல்லது தற்காலிக அடிப்படையில் குறிப்பிடப்பட்ட 02 (ஆ) மற்றும் (இ) இன்கீழ் சேவை செய்பவர்கள் விண்ணப்பம் செய்வதற்குத் தகுதியற்றவராவர்.

**3. தேர்வு முறை :**

3.1 விண்ணப்பதாரர்கள் ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றும்படி கோரப்படுவர். பரீட்சை ஆங்கில மொழி மூலத்தில் மாத்திரம் கொழும்பில் நடைபெறும். சுருக்கெழுத்துப் பரீட்சைக்கான வேகம் நிமிடத்திற்கு 60 சொற்களாகும். ஆங்கில சுருக்கெழுத்துப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும். 40 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளி விகிதத்தைப் பெறுபவர்கள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எனினும் எழுத்துமூலப் பரீட்சையில் மேற் கூறப்பட்ட புள்ளி மட்டத்தை போதிய பரீட்சார்த்திகள் பெறத் தவறும் பட்சத்தில் குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்குண்டு.

3.2 எழுத்து மூலப் பரீட்சையில் திறமை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு அழைக்கப் படுவர். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணப்பதாரர்களின் தகைமை மற்றும் அத்தாட்சியாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் பரீட்சிக்கப்படும். நேர்முகப் பரீட்சை வெளிவிவகார அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப் படும். தகைமை நிலை வெளிவிவகார அமைச்சின் செயலாளரி னால் அவரது தற்றுணிபு பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

3.3 பரீட்சை நடத்துதல், பெறுபேறுகளை வழங்குதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தாகும்.

3.4 எழுத்துப் பரீட்சையில் 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளது திறமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளிவிவகார அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படும்.

அதற்கு மேலதிகமாக, பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் அவர்களது பெறுபேறு தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும்.

**4. பதவிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 (அ) தெரிவாகும் உத்தியோகத்தரொருவர் இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டதொரு காலத்திற்கு வெளிவிவகார அமைச்சில் சேவையாற்றல் வேண்டும். இச் வேவைக்காலத்தில் அவரது வேலை மற்றும் நல்லொழுக்கம் என்பன சம்பந்தமாக அதிருப்தி காணுமிடத்து அவரது தெரிவு நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. அமைச்சின் தேவைகளுக்கமைய அமைச்சில் பணிபுரியும் காலம் மாற்றப்படலாம்.

(ஆ) அந்தந்த தூதரகங்களின் தேவைகளைப் பொறுத்து உத்தியோகத்தரின் தகைமை மற்றும் (வெளிநாட்டு மொழி ஆகியவற்றில்) திறமை ஆகியவற்றினைப் பொறுத்து நியமனம் வழங்கப்படும். இப்படியான நியமனங்களை மேற்கொள்ளும்போது உத்தியோ கத்தரின் தனிப்பட்ட தேவைகள் மற்றும் முறைப்பாடு களையிட்டுக் கவனிக்க (பிள்ளைகளின் கல்வி என்பன போன்ற) அமைச்சிற்கு எதுவித கடப்பாடும் இல்லை. மேலும், தேர்வுப் பரீட்சை மூலம் பெறப்பட்ட தேர்வு நிலை அடிப்படையில் வெற்றிடங்களை நிரப்புவ தற்கான கட்டுப்பாடெதுவும் அமைச்சிற்கில்லை.

4.2 தெரிவாகும் உத்தியோகத்தர் ஒருவர் இலங்கைத் தூதரக மொன்றிற்கு நியமனம் பெறும்போது வெளி விவகார அமைச்சு செயலாளர் விதிக்கும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய சாதாரணமாக மூன்று வருடங்கள் சேவையாற்றக் கோரப்படுவர் என்பதுடன் அதற்குரிய ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட வேண்டும்.

4.3 அரசாங்க சேவையிலுள்ள (அரச முகாமை உதவியாளர் சேவை, மாகாண அரசாங்க சேவை, உள்ளூராட்சி அரசாங்க சேவை) உத்தியோகத்தர்கள் தெரிவாகுமிடத்து தற்பொழுது பெறும் சம்பளத்திட்டத்தைத் தொடர்ந்து பெறுவார்கள். மற்றவர்கள் நிலையானதான ரூபா 15,610 ஐ மாதாந்தம் பெறுவார்கள். இதற்கு மேலதிகமாக தற்போதுள்ள விதிகள், பிரமாணங்களுக்கமைய வெளிநாட்டு இலங்கைத் தூதர கங்களில் சேவையாற்றும் போது அந்நாட்டிற்குரியதான பணிக்கொடையொன்றையும் பெறுவர்.

4.4 தெரிவாகும் ஓர் உத்தியோகத்தர் வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தூதரகமொன்றிற்கு நியமனம் பெறும்போது அங்கு செல்வதற்குரிய மற்றும் திரும்பி வருவதற்குரிய பிரயாணச் செலவுகளை அரசாங்கம் பொறுப்பேற்கும். அங்கு தங்குமிடச் செலவுகள் மற்றும் வெளிவிவகார அமைச்சு செயலாளரினால் தீர்மானிக்கப்படும் பிறகொடுப்பனவுகள் என்பன அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் இச்சலுகைகள் அவரது வெளிநாட்டுச் சேவைக் காலத்தில் அவரதும் அவரது வாழ்க்கைத்துணை மற்றும் இவரில்

தங்கியுள்ள இரு பிள்ளைகளுக்கும் மட்டுமே ஆகும். (இவ்விதிக் கூற்றுக்கமைய இவரில் தங்கியுள்ள பிள்ளைகள் என்பது திருமணமாகாத 21 வயதிற்குட்பட்ட பிள்ளைகளைக் குறிக்கும்).

5. **விண்ணப்பிக்கும் முறை :**

5.1 அச்சடிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை போன்று ஏ-4 அளவிலான கடதாசியில் 1 தொடக்கம் 9 வரையான பகுதியை முதற் பக்கத்திலும் 10 தொடக்கம் 19 வரையான பகுதியை இரண்டாம் பக்கத்திலும் மிகுதியை மூன்றாம் பக்கத்திலுமாக தயாரித்து விண்ணப்பதாரரின் சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தயாரிக்கப்படும்போது சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான விண்ணப்பப்படிவங்களில் பரீட்சையின் பெயர் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட வேண்டும்.

**குறிப்பு**.- அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை/ உள்ளூராட்சி அரசாங்க சேவை ஆகியவற்றில் சேவை புரிபவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவம் 1 ஐயும் பிற சேவையினர் மாதிரி விண்ணப்பப்படிவம் 2 ஐயும் பாவித்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்றதல்லாத விண்ணப் பங்கள் மற்றும் தேவைப்படுவதுமான விபரங்களைப் பூரணப் படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறிவித்தல் ஏதும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நகல் ஒன்றை வைத்திருக்கும்படி விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படு கின்றனர். தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் வெளிநாட்டில் சேவை புரிவதற்குத் தகுதியுள்ளவரா என்பதானதும் விண்ணப் பத்தில் கூறியிருப்பவை உண்மையானவை என்பதானதும் அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவாகும் பட்சத்தில் அவரைத் தற்போதைய சேவையிலிருந்து உடனடியாக விடுவிக்க முடியு மென்பதுமான திணைக்களத் தலைவரின் உறுதிப்பாட்டையும் கொண்டிருத்தல் வேண்டும்.

5.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 'பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை' என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 2013.12.09 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கும் படியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை வெளிநாட்டு தூதரகங்களில் உள்ளூர் தேர்வு அடிப்படையில் தன் உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கூடொன்றிற்குள் (2 x 2 சென்ரி மீட்டர்) ஆங்கில எழுத்து "P" தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவம் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இந்தப் பரீட்சை 2014, மாச்சு மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 400 ஆகும். இப் பரீட்சைக் கட்டணத்தை 2003-02-13 என்ற பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானக் கணக்கிற்கு தீவின் எப்பகுதியிலாவது அமைந்துள்ள எந்தவொரு மாவட்டச் செயலகத்திலோ அல்லது பிரதேச செயலாளர் காரியாலயத்திலோ விண்ணப்பதாரியின் பெயரில் செலுத்தப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் குறித்த இடத்திலுள்ள ஓர் விளிம்பில் இணைக்கவும். குறித்த இடத்தில் பற்றுச்சீட்டு இலக்கம், பணம் செலுத்திய பிரதேச செயலாளர் செயலகம், செலுத்திய தினம் மற்றும் செலுத்தப்பட்ட தொகை என்பவற்றைக் குறிப்பிடவும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சைக் கட்டணம் மீள வழங்கப்படமாட்டாது. காசுக்கட்டளைகள் அல்லது முத்திரைகள் மூலமாகச் செலுத்தப்படும் பரீட்சைக்கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றை விண்ணப்பதாரி தன்னிடம் வைத்துக் கொள்வது சாலச் சிறந்தது.

7. சகல அம்சங்களிலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டதென்பதான குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது குறித்து அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் ஏற்கப்பட்ட தகுதி படைத்த விண்ணப்பதாரர்கள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சைக்குச் சமுகமளிக்கும்படி கோரப்படுவர். எழுத்துப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது டன் இது பற்றிய அறிவித்தலொன்று பத்திரிகைகளில் வெளியிடப்படும். பத்திரிகை அறிவித்தலைத் தொடர்ந்து 2 அல்லது 3 நாட்களுக்குள் அனுமதிச் சீட்டைப் பெறாத விண்ணப்பதாரர் ஒருவர் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். இப்படியான விண்ணப்பதாரர்கள் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லை என்பதான கடிதத்துடன் அத்தாட்சிப்படுத்தப் பட்ட விண்ணப்பத்தின் பிரதி, பணம் செலுத்தியதிற்கான பற்றுச்சீட்டின் பிரதி ஆகியவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் செய்ய வேண்டும் (கொழும்பைத் தவிர்ந்த வெளியிடத்தில் வதியும் ஒருவராயின் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதற்கு இலகுவாக தொலைநகலி யொன்றைக் குறிப்பிடல் வேண்டும்.

பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல் களுக்கு ஏற்ப நீங்கள் உங்களது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சை நடைபெறும் முதலாவது நாளிலேயே உங்கள் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதியட்டை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

9. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பரீட்சையின்போது பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஆட்கள் பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது வலுவிலிருக்கும் கடவுச்சீட்டு என்பன மட்டுமே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை நிருபிப்ப தன் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

10. பரீட்சைக்கான அனுமதிச் சீட்டை விண்ணப்பதாரர்க்கு வழங்குவதன் மூலம் பரீட்சார்த்தி பரீட்சைக்கான தகைமைகள் எல்லாவற்றையும் பெற்றுள்ளார் என்னும் கருத்துக் கொள்ளப்பட லாகாது.

11. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் போது குறிப்பிடப்படும் பரீட்சார்த்தியின் பதவி மற்றும் சேவைநிலையம் என்பன பரீட்சை சம்பந்தமான சகல தொடர்பாடல்களுக்கும் உரித்துடையதாவதுடன் விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட்டதன் பின்னர் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமான கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

12. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைமுறைகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும் விதிகள் மற்றும் பிரமா ணங்களிற்கு கட்டுப்பட்டவராவர். மேலும் இவ்விதிகளை மீறும் பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஏதாவது தண்டனைகளிற்கு உள்ளாக்கப்படுவர்.

கருணாதிலக அமுணுகம,
செயலாளர்,
வெளிவிவகார அமைச்சு.

வெளிவிவகார அமைச்சு,
த.பெ.583,
"குடியரசுக் கட்டிடம்",
கொழும்பு 01.
2013.10.24.

மாதிரி விண்ணப்பப்படிவம் - இல. 01

**இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்நாட்டுத் தேர்வு அடிப்படையில் பிரத்தியேக உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை -2013 (2014)**

(அரசாங்க /மாகாண அரசாங்கசேவை /உள்ளூராட்சி அரசாங்க சேவை ஆகியவற்றின் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

APPLICATION FOR POST OF HOME BASED PERSONAL ASSISTANTS IN SRI LANKA MISSIONS ABROAD- 2013 (2014)

(Only for Applicants from Public / Provincial Public/ Local Govt. Services)

பகுதி – அ

[ ]

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில தனி எழுத்தில் -English Block Letters) Mr./Mrs./Miss :----.
   (ii) முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில தனி எழுத்தில் -English Block Letters) : Mr./Mrs./Miss ----.
   (உதாரணம் : SILVA A.B.)

2. முகவரி :
   (அ) அலுவலகம் :----.
   (ஆ) சொந்த: (ஆங்கில தனி எழுத்துக்களில் - English Block Letters) :----.
   (அனுமதிப் படிவம் இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)
   (இ) தொலைபேசி இல. :----.

3. (i) பால் : ஆண் - 0 [ ]
   பெண் - 1
   (பெட்டிக்குள் உரிய எண்ணைக் குறிப்பிடுக)
   (ii) தேசிய அடையாள அட்டை இல:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

   (iii) பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

   (iv) விண்ணப்ப முடிவு திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா?
   திருமணமாகாதவர் - 1 [ ]
   திருமணமானவர் - 2
   (பெட்டிக்குள் உரிய எண்ணைக் குறிப்பிடுக)

5. திருமணமானவராயின் வாழ்க்கைத் துணையின் பெயரும் தேசிய இனமும் :----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களின் பெயர், அவர்களின் பிறந்த திகதியும் வயதும் :----.

7. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் தொழில் விபரம் : (அரச உத்தியோகத்தராயின் முழுவிபரம் தருக) :----.

8. கல்வித் தகைமைகள் (மொழி மூலம் உட்பட) :----.

9. அரசாங்க/ மாகாண அரச சேவை /உள்ளூராட்சி அரச சேவையில் முதல் நியமனத் திகதி :----.

10. பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

11. தற்போதைய தரமும் அதன் திகதியும் :----.

12. தற்போதைய வருடாந்த சம்பளம் :----.

13. தற்போது ஆற்றும் கடமையின் தன்மை :----.

14. வேகம் :
   (அ) ஆங்கில சுருக்கெழுத்து :----.
   (ஆ) ஆங்கில தட்டச்சு :----.

15. தேர்ச்சித் திறன்:
   (அ) ஆங்கில மொழி :----.
   (ஆ) சிங்கள/ தமிழ் மொழி :----.
   (இ) கணனி அறிவு :----.
   (ஈ) பிற வெளிநாட்டு மொழிகள் :----.

16. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய (சேவையாற்றி இருப்பின்) வெளிநாட்டு இலங்கைத் தூதரகங்கள் மற்றும் சேவைக் காலம் :----.

17. பிற தகைமைகள் ஏதும் :----.

18. குறிப்புகள் :----.

பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பரீட்சைக் கட்டுப் பணத்திற்கு பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சரியான தொகைக்கான பற்றுச் சீட்டை விண்ணப்பதாரர்கள் இங்கே ஒட்டுதல் வேண்டும்.

[ ]

(1) பற்றுச் சீட்டு இலக்கம் :----.
(2) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(3) திகதி :----.
(4) செலுத்திய தொகை :----.

19. **பரீட்சார்த்தியின் உறுதியுரை :**

2013.12.09 ஆந் திகதிக்கு முன்னரான ஐந்து வருட காலத்தில் நான் சகல சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றுள்ளேன் என்பதுடன் நான் இழைத்த ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லை என்பதனையும் எனது அறிவிற்கெட்டிய வரையில் இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும்

உண்மையானவையுமென வெளிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை சம்பந்தமான சட்டதிட்டங்களுக்கு அமைந்து ஒழுகுவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

பகுதி ஆ

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(திணைக்களத் தலைவரினால் நிரப்பப்படல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி /செல்வி ---------- ----------------------- என்பவர் 2013.12.09 ஆந் திகதிக்கு முற்பட்ட ஐந்து வருட காலங்களில் (அ) சகல சம்பள உயர்வுகளையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்பதையும் ; (ஆ) இக்காலப்பகுதியில் அவர் இழைத்த ஏதேனும் தவறுக்காக (எச்சரிக்கை நீங்கலாக) எந்தவொரு ஒழுக்காற்று தண்டனைக்கும் ஆளாகியிருக்கவில்லை என்பதையும் நான் ஆராய்ந்தறிந்துள்ளேன்.

விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சைக்குரிய கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதெனவும் அதற்குரிய பற்றுச்சீட்டு இதனுடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும் உறுதிப்படுத்துகின்றேன். இவ்விண்ணப்பதாரி என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் அவரது கையொப்பம் சரியானது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பதாரர் தெரிவாகும் பட்சத்தில் அவர் தற்போதைய பதவியிலிருந்து உடனடியாக விடுவிக்கப்பட முடியுமென்பதையும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.

மாதிரி விண்ணப்பப்படிவம் - இல. 02

**இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்நாட்டுத் தேர்வு அடிப்படையில் பிரத்தியேக உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

(ஓரளவு அரசாங்க சார்புடைய தாபனங்களின் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

APPLICATION FOR POST OF HOME BASED PERSONAL ASSISTANTS IN SRI LANKA MISSION ABROAD – 2013 (2014) (ONLY FOR APPLICANTS FROM SEMI GOVERNMENT ORGANIZATIONS)

பகுதி – அ

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1. (i) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் (ஆங்கில தனி எழுத்தில் -English Block Letters) (Mr./Mrs./Miss :----.

(ii) முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில தனி எழுத்தில் -English Block Letters) : Mr./Mrs./Miss ----.
(உதாரணம் : SILVA, A.B.)

2. முகவரி :
(அ) அலுவலகம் :----.
(ஆ) சொந்த: (தனி எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்)
(இ) தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பால் : ஆண் - 0
பெண் - 1 ☐
(பெட்டிக்குள் உரிய எண்ணைக் குறிப்பிடுக)

(ii) தேசிய அடையாள அட்டை இல: ☐☐☐☐☐☐☐☐☐☐

(iii) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iv) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. சிவில் அந்தஸ்த்து-
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2 ☐
(பெட்டிக்குள் உரிய எண்ணைக் குறிப்பிடுக)

5. திருமணமானவராயின் வாழ்க்கைத் துணையின் பெயரும் தேசிய இனமும் :----.

6. பிள்ளைகளின் எண்ணிக்கை, அவர்களின் பெயர், அவர்களின் பிறந்த திகதியும் வயதும் :----.

7. வாழ்க்கைத் துணை தொழில் புரிபவராயின் தொழில் விபரம் :

(அரச உத்தியோகத்தராயின் முழுவிபரம் தருக) :----.

8. கல்வித் தகைமைகள் (மொழி மூலம் உட்பட) :----.

9. விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னரான ஐந்து வருட காலப்பகுதியில் விண்ணப்பதாரர் சேவையாற்றிய தாபனத்தின் பெயர் மற்றும் சேவையாற்றிய காலம் (சேவைக்காலப் பத்திரத்தை இணைக்கவும்):

| தாபனத்தின் பெயர் | பதவிப் பெயர் | காலம் | |
|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை |
| | | | |

10. உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

11. தற்போதைய தரமும் அதில் சேர்ந்த திகதியும் :----.

12. தற்போதைய வருடாந்த சம்பளம் :----.

13. தற்போது ஆற்றும் கடமைகளின் தன்மை :----.
14. வேகம் :
(அ) ஆங்கில சுருக்கெழுத்து :----.
(ஆ) ஆங்கில தட்டச்சு :----.
15. தேர்ச்சித் திறன்:
(அ) ஆங்கில மொழி :----.
(ஆ) சிங்களம்/ தமிழ் மொழி :----.
(இ) கணனி அறிவு :----.
(ஈ) பிற வெளிநாட்டு மொழிகள் :----.
16. விண்ணப்பதாரர் முன்னர் சேவையாற்றிய (சேவையாற்றி இருப்பின்) வெளிநாட்டு இலங்கைத் தூதரகங்கள் மற்றும் சேவைக் காலம் :----.
17. பிற தகைமைகள் ஏதும் :----.
18. குறிப்புகள் :----.

பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பரீட்சைக் கட்டுப் பணத்திற்கு பிரதேச செயலாளரிடமிருந்து பெறப்பட்ட சரியான தொகைக்கான பற்றுச் சீட்டை விண்ணப்பதாரர்கள் இங்கே ஒட்டுதல் வேண்டும்.

(1) பற்றுச் சீட்டு இலக்கம் :----.
(2) பிரதேச செயலாளர் பிரிவு :----.
(3) திகதி :----.
(4) செலுத்திய தொகை :----.

19. **பரீட்சார்த்தியின் உறுதியுரை**.- இவ்விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையுமென இத்தால் நான் உறுதிமொழிகின்றேன். மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தேர்வுக்கு முன்னர் காணப்படுமிடத்து தகுதியற்றவராவேன் எனவும் நியமனம் கிடைக்கப்பெற்ற பின்னர் பிழையெனக் காணப் படுமிடத்து நட்டஈடேதுமின்றி பதவியிலிருந்து வெளியேற்றப் படுவேன் எனவும் நான் அறிவேன்.

மேலும், பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கும் பெறுபேறுகளை விநியோகிப்பது தொடர்பில் அவரால் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதை இத்தால் நான் உறுதிமொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

பகுதி ஆ
**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**
(திணைக்களத் தலைவரினால் நிரப்பப்படல் வேண்டும்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ----------------------- என்பவர் இத்தாபனத்தில் ------------------ ஆந் திகதியிலிருந்து சேவையாற்றுகின்றார் என்றும் ஐந்து வருட காலத்திற்குள் எல்லா வேதனவேற்றங்களையும் பெற்றுள்ளாரென்றும் எச்சரிக்கை தவிர்ந்த வேறெந்த தண்டனைக்கும் ஆளாகவில்லையென்றும் இவரின் தொழில் மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும் இவ் அலுவலகத்தில் பேணப்படும் ஆவணங்களின் பிரகாரம் அவரினால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் அவர் -------- 2013 ஆந் திகதியன்று என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன். மேலும் அவர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளாரென்றும் அதற்கான பற்றுச் சீட்டை இத்துடன் இணைத்துள்ளார் என்றும் இத்தால் சான்று படுத்துகின்றேன்.

இவ்வுத்தியோகத்தர் தெரிவாகும் பட்சத்தில் தற்போதைய பதவியிலிருந்து அவரை உடனடியாக விடுவிக்க முடியுமென்பதையும் சான்றுபடுத்துகின்றேன்.

----.
திணைக்கள தலைவரின் கையொப்பம்.

திணைக்கள தலைவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11-362

---

**போக்குவரத்து அமைச்சு**

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

**மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II பிரிவு 'ஆ' ஐச் சேர்ந்த மோட்டார் வாகன பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

Open competitive Examination for Recruitment of Motor Vehicle Examiner to Class II segment B of the Sri Lanka Technological Service for the Department of Motor Traffic - 2013

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' பிரிவிற்கு மோட்டார் வாகன பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2014, மாச்சு மாதம் கொழும்பில் மட்டும் நடாத்தப்படும். இப்பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் உரிமை மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் வசமானதாகும்.

**நேர்முகப் பரீட்சை**.- எழுத்துமூலப் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றி, ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக் குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களிலிருந்து மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் திருப்தியுறும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட உச்சமட்ட மொத்தப் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரர்கள் தொடர்பில் நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் திகதி மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். (நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.)

1. நியமனம் வழங்கப்படுபவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயல்வலு பெறும் திகதி என்பன மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும்.

**2. கட்டமைப்பும் மாதாந்த சம்பள அளவுத் திட்டமும் :-**

விசேட வகுப்பு : ரூபா 21,125 - 8 × 356 - 18 × 500 - ரூபா 33,045.
I ஆம் வகுப்பு : ரூபா 21,045 - 19 × 360 - ரூபா 27,855.
II ஆம் வகுப்பு 'அ' பிரிவு : ரூபா 17,485 - 18 × 320 - ரூபா 23,245.
II ஆம் வகுப்பு 'ஆ' பிரிவு : ரூபா 15,005 - 4 × 180 - 18 × 240 - ரூபா 27,885.

(ரூ. 15,365 சம்பள படிநிலையை எய்துவதற்கு முன் முதலாவது வினைத்திறன் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். II 'அ' வகுப்பிற்கு பதவியுயர்வு பெறும் பொருட்டு II 'ஆ' வகுப்பில் 6 வருடகால சேவையினைப் பூர்த்திசெய்வதற்கு முன் முதலாவது திணைக்களப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

இப்பரீட்சை மூலம் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பு மோட்டார் வாகன போக்குவரத்து பரீட்சகர்களுக்கான வெற்றிடங்களே நிரப்பப்பட உள்ளன.

3. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய திட்டத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்பினைச் செய்தல் வேண்டும்.

4. **தகவுத்திறன்**.- ஒவ்வொரு பரீட்சார்த்தியும்,

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) சிறந்த குணநலமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(இ) விண்ணப்ப இறுதித் திகதியின்போது 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஏற்கனவே அரச சேவையிலுள்ள அதிகாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

5. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதத்துடன் மொழி உட்பட நான்கு சிறப்புச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) 3 சித்திகள் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) 4 சித்திகள் அடைந்திருத்தல் ;

(ii) மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்பவியல் அல்லது பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா ;

அல்லது

(iii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய எந்திரவியல் விஞ்ஞானம், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா ;

அல்லது

(iv) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய எந்திரவியல், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி உயர் டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தேசிய எந்திரவியல், பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா ;

அல்லது

(vi) இலங்கை எந்திரவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் எந்திரவியல் பரீட்சையில் பகுதி I, பொறிமுறை எந்திரவியல், தானாகவியங்கி டிப்ளோமா ;

அல்லது

(vii) மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு நிகரானது என இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதென சான்றுபடுத்தப்பட்ட ஏதேனும் பிற தகைமைகள்.

6. **தொழில்சார் அறிவும் அனுபவமும்**.- (i) ஒவ்வொரு விண்ணப்பகாரரும் மேலே குறிப்பிட்ட தொழில்நுட்பவியல் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பிற்பாடு, அரசாங்கத்தில் அல்லது அரச கூட்டுத்தாபன/நியதிச் சட்ட சபையொன்றில் அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு குறைந்தபட்சம் 10 ஊழியர்கள் பொருட்டு பங்களிப்புச் செய்கின்ற அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகன திருத்தும் நிலையம் ஒன்றில் உரிய துறையில் குறைந்த பட்சம் இரு மேற்பார்வை மட்டத்திலான அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;

மற்றும்

(ii) சகல மோட்டார் வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றிருத்தல்.

7. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்குரிய சகல தகைமை களையும், பரீட்சை பொருட்டு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கட்டாயமாகப் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

8. நியமனம் பெறுபவர்கள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவ தற்கு உடல் ரீதியாக தகுதி உடையவரா/அற்றவரா என பரிசோதிக்கு முகமாக அரச வைத்திய அதிகாரி ஒருவரினால் நடாத்தப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்றுதல் வேண்டும்.

9. நியமனம் பெறும் சகல அலுவலர்களும், அரசாங்க சேவைக்குச் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழி தொடர்பிலான தேர்ச்சியினை சேவைக்குச் சேர்ந்து 5 வருடங்களுக்குள் பெறுதல் வேண்டும்.

10. **பரீட்சை நடைமுறை**.- ஆட்சேர்ப்புப் பரீட்சை இரு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது. அது தொடர்பிலான விபரங்கள் வருமாறு :-

(i) மோட்டார் இயந்திர அறிவியல் தொடர்பான சாதாரண அறிவு - (காலம் : 2 மணித்தியாலங்கள்) - 100 புள்ளிகள்

(இவ் வினாத்தாள் பல்தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்களை உள்ளடக்கியதாகும். விண்ணப்பதாரிகள் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்).

கீழே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப துறைகள் தொடர்பான அடிப்படை அறிவினையும், குறித்த துறைகளுக்கு ஏற்புடைய வாறான குறைபாடுகள் தொடர்பான அடிப்படை அறிவினையும் விண்ணப்பதாரர்கள் பெற்றிருத்தல் வேண்டும்:-

(1) டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரத்தின் செயற்பாடு மற்றும் வேக தள்ளுபடி நிலைமை (velocity rebate)

(2) கிளச்சு மற்றும் செலுத்துகை முறைமை

(3) உராய்வு நீக்கும் முறைமை மற்றும் குளிராக்கும் முறைமை

(4) மின் முறைமை

(5) டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்களின் எரிபொருள் முறைமைகள்

(6) கால் தடுப்பு முறைமை, தடுப்பின் வினைத்திறனைப் பரீட்சிக்கும் உபகரணங்களைப் பரிசோதித்தல், எதிர்த்தாக்கல் காலம் மற்றும் நிறுத்தும் தூரம்

(7) கைதடுப்பு முறைமை

(8) சில்லு வரிசையாக்கல் மற்றும் சுக்கான் பொறிநுட்பத்தை பரீட்சிக்கும் உபகரணங்கள்

(9) இடைநிறுத்தும் நிலை (suspension) முறைமை

(10) மோட்டார் வாகனமொன்றின் தர அறிக்கையைத் தயாரித்தல்

(11) மோட்டார் வாகனமொன்று பொருட்டு தகுதிச் சான்றிதழ் வழங்குதல்

(12) திணைக்களத்தின் பணிகள் மற்றும் மோட்டார் வாகனப் பரீட்சகர் ஒருவருக்குரிய கடமைகள் தொடர்பான சாதாரண அறிவு

(13) வர்ணந்தீட்டல், காய்ச்சி ஒட்டுதல் மற்றும் பொருத்துதல் தொடர்பான அறிவு

(14) தன்னியக்க செலுத்துகை.

(ii) நுண்ணறிவுப் பரீட்சை- (காலம் : 1 மணித்தியாலம்)
- 100 புள்ளிகள்

(விண்ணப்பதாரர் மொழிசார் மற்றும் எண்சார் திறன், பகுத்தறியும் ஆற்றல் போன்ற துறைகள் அடங்கலாக பரீட்சார்த்திகளின் நுண்ணறிவை மதிப்பிடும் முகமாக தயாரிக்கப்பட்ட பல்தேர்வு மற்றும் குறுகிய விடை மாதிரியான 50 வினாக்களைக் கொண்டிருக்கும். விண்ணப்பதாரிகள் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.)

**கவனிக்கவும்** :- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு, இவ்வறிவித்தலின் 5 (I-VI) வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளின் பிரகாரம் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றிய மொழியிலேயே அதாவது சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழி மூலம் தோற்றுதல் வேண்டும். இருப்பினும் தகைமைப் பரீட்சையில் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற பரீட்சார்த்தி ஒருவர் தான் விரும்பின் இப்பரீட்சையில் சிங்கள மொழி மூலம் விடையளிக்க முடியும். பரீட்சை பொருட்டு விண்ணப்பித்த மொழி ஊடகத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என்பதனை கருத்திற்கொள்க.

(ii) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் பரீட்சார்த்திகள் மத்தியிலிருந்து மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பரீட்சார்த்திகளுக்கு மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. **விண்ணப்பிக்கும் முறை**.- (i) மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள், தாங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் உரிய மாதிரி விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக, ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் ஒவ்வொரு பிரிவும் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரியினால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் தங்களுக்கு ஏற்புடையதற்கு பிரிவு ஏதுமிருப்பின் அதில் ஏற்புடையதன்று எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் வெறும் கோடு இருப்பது அதனை நிராகரிப்பதற்கு வழிவகுக்கும் என்பதனை உறுதியாகக் கருத்திற் கொள்ளவும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் இணங்காத விண்ணப்பப்படிவங்களும் முழுமையான தகவல்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். தாம் விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தின் ஒளிப்படப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருத்தல் சிறந்ததாகும். மேலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்துப்போகிறதா என்பது பற்றி விண்ணப்பதாரிகள் விமர்சித்துப் பார்த்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு இல்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப் படும் என்பதனையும் கருத்திற்கொள்க. (மாதிரி விண்ணப்பப்படிவத்தின் 1.0 முதல் 1.11 வரையிலான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும் 2 முதல் 3 வரையிலான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், 4 முதல் 7 வரையிலான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும் இருக்குமாறு ஏ4 அளவிலான தாள்களின் இரு பக்கத்தையும் பயன்படுத்தி தயாரித்துக்கொள்ளவும்.)

(ii) விண்ணப்பப்படிவங்கள், 2013.12.10 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் "மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம், மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம், இல. 341, எல்விட்டிகல மாவத்தை, நாராஹேன்பிட்டி, கொழும்பு 5" எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இத்திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் சகல விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தை வைத்து அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு இல. 2003-02-14 இற்கு வரவு வைக்கும்படியாக ஏதேனும் மாவட்ட/பிரதேச செயலகத்துக்கு பரீட்சைக் கட்டணமாக ரூ. 1,000 செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் சிறந்ததாகும். இப்பரீட்சைக் கட்டணமானது எவ்வித காரணத்திற்காகவும் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. மேலும் வேறு பரீட்சைக்கு மாற்றுவதற்கும் வசதியளிக்கப்பட மாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்கள்/அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றில் ஏற்கனவே சேவையிலுள்ள பரீட்சார்த்திகள், தங்களது விண்ணப்பங்களை சேவையாற்றும் திணைக்கள அல்லது நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். 2013.12.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன் மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடிய விதத்தில் அனுப்பும் படியான வேண்டுகோளுடன் உங்கள் விண்ணப்பங்களை உங்களது திணைக்களத் தலைவருக்கு தாமதிக்காமல் சமர்ப்பிக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் அல்லது குறித்த திணைக்களத்தின் வேறோரு அலுவலரின் தனிப்பட்ட பெயருக்கு விண்ணப்பங்கள் அனுப்பக் கூடாது. திணைக்களத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்களாயினும் உரிய திகதிக்குப் பின் கிடைப்பின் நிராகரிக்கப்படும். ஏற்கனவே அரச சேவையிலுள்ள

பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்களில் கையொப்பத்தை உறுதிப்படுத்தும் முகமாக திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும் இல்லையெனில் குறித்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-** ஏற்கனவே அரச சேவையிலுள்ள பரீட்சார்த்திகளின் கையொப்பம், உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அவர் பொருட்டு கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம், அதனை உறுதிப் படுத்துவதற்கு அதிகாரம்பெற்ற ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது, சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, நொத்தாரிசு, அரச பாடசாலை அதிபர், தரைப்படை, கடற்படை அல்லது விமானப்படை ஆகியவற்றிலுள்ள ஆணைபெற்ற அலுவலர், அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/2006 இன்படி மாதாந்த திரட்டுச் சம்பளம் ரூ. 22,935 அல்லது அதற்கு மேல் மாதாந்த சம்பளம் பெறும் நிரந்தர அரச அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பிக்கு அல்லது தலைமைப் பிக்கு, வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாக உள்ள மதகுருமார் அல்லது மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

12. **பரீட்சைக்கு அனுமதித்தல்.-** மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பப்படிவங்களைத் தேர்ந்தெடுத்து அவ்விண்ணப்பப்படிவங்களை பரீட்சைகள் ஆணையாளருக்கு அனுப்பியதன் பின்னர் அவரே குறித்த பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டையினை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தங்களது கையொப்பங்களை உறுதிப்படுத்திக்கொண்டு அவ்வனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அனுமதி அட்டையொன்றைச் சமர்ப்பிக்காத பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தை தவிர்ந்த வேறொரு பரீட்சை மண்டபத்திற்கு வருகை தரும் பரீட்சார்த்திகள் எவருக்கும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றும் தினத்திலேயே தமது அனுமதி அட்டையினை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சையின்போது பரீட்சார்த்தி கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் இவ்வர்த்தமானி அறிவித்தலின் பகுதி I : தொகுதி (IIஅ) பந்தியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. பரீட்சை பரீட்சார்த்திகள் இவ்விதிமுறைகளைப் பின்பற்ற கடமைப்பட்டுள்ளனர். பரீட்சை நடாத்தப்படும் திகதி அடங்கிய பரீட்சை அறிவித்தல் செய்தித் தாளில் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 தினங்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறவில்லையாயின் அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமிருக்கும் விண்ணப்பப் படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் ஒளிப்படப் பிரதிகளையும், பதிவுத்தபால் பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளியிலுள்ள பிரதேசமெனில் அனுமதி அட்டையினை அனுப்புவதற்கான தொலைநகல் இலக்கத்தினையும் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்தினை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிப்பதே மிகவும் சிறந்ததாகும். பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். பரீட்சார்த்தி எவரேனும் இவ்விதிமுறைகளை மீறின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்பட நேரிடும். அபேட்சகர் ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்பதாகக் கருதப்படலாகாது.

13. **அடையாள அட்டை.-** பரீட்சார்த்திகள் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடம் பொருட்டும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சை மண்டபத்தினுள் சுய அடையாளத்தினை நிரூபித்துக் காட்டல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாத காலத்தினுள் வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளினது பரீட்சார்த்தி நிலை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரைக்கிணங்க இரத்துச் செய்யப்பட முடியும்.

14. **தகைமைகள் தொடர்பிலான ஆவணங்கள்.-** (i) பணம் செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் தகைமைகளை நிரூபிப்பதற்கான சகல சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் என்பன விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான சகல விபரங்களும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு தேவைப்படும் விடயங்களைக் கொண்டிராத விண்ணப்பப்படிவங்கள் ஏதுமிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

(ii) நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெறும் பரீட்சார்த்திகள் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பித்து சுய தகவுத்திறனை நிரூபித்தல் வேண்டும்.

(iii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் அவசியமாகும் :-

(அ) அதிகாரம்பெற்ற ஒருவரினால் வழங்கப்பட்ட குணநலச் சான்றிதழ்.

குறித்த சான்றிதழ் சமாதான நீதவான், சட்டத்தரணி, வசிக்கும் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அ. நி. சு. இல. 6/2006 இன்படி சம்பள அளவுத்திட்டத்தில் ஆரம்ப மாதாந்த சம்பள படிநிலை ரூ. 22,935 அல்லது அதற்கு மேல் மாதாந்த சம்பளம் பெறும் நிரந்தர அரச அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாக உள்ள பிக்கு அல்லது தலைமைப் பிக்கு, வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாக உள்ள மதகுருமார் அல்லது மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோரில் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். சான்றிதழ் வழங்குபவரின் பதவி, பெயர், முகவரி என்பன அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

அரச சேவையில் நிரந்தரப் பதவி ஒன்றை வகிக்கும் அபேட்சகர் குணநலச் சான்றிதழைச் சமர்ப்பிக்க அவசியமில்லை.

(ஆ) பரீட்சார்த்தியின் பிறப்புச் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி அல்லது (பிறப்பு பதிவு செய்யப்பட்டிராத பரீட்சார்த்தி தொடர்பில்) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய விசேட சான்றிதழ்.

**கவனிக்கவும்**.- பாடசாலை பாவனை பொருட்டு அல்லது கல்வி நடவடிக்கை பொருட்டு வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்பை பதிவுசெய்யும் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பிறப்புச் சான்றிதழுக்குப் பதிலாக சத்தியக் கடதாசி அல்லது திருமுழுக்குச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர்/பெயர்கள் மற்றும் பரீட்சார்த்தி பொதுவாகப் பயன்படுத்தும் அத்துடன் அவர் பரீட்சையில் தோற்றிய பெயர்/பெயர்கள் என்பனவற்றுக்கிடையில் வேறுபாடு இருப்பின் உரியவாறு பிறப்பு, இறப்புப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 110) இல. 27 அல்லது 28 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி தனது பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் / பெயர்களை திருத்திக் கொள்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும் :-

(iv) இலங்கைப் பிரசையாக பதிவுசெய்யப்பட்ட சான்றிதழ் அல்லது பரம்பரையாக உரித்தான பிரசை உரிமை உள்ளது என அரசாங்கம் ஏற்றுக்கொண்டதற்கான கடிதம் (ஏற்றவாறு).

(v) இவ்வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்புடையதாக பெற்றுக்கொண்டுள்ள (கல்வி, தொழில்சார்) தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள்.

(vi) பயிற்சி பெற்றுள்ள மோட்டார் பழுதுபார்க்கும் நிலையத்திலிருந்து பெற்றுக்கொண்ட பிரயோகப் பரீட்சைக்கு ஏற்புடைய சான்றிதழ்.

(vii) சகல மோட்டார் வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுவதற்கான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

(viii) விண்ணப்பம் சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான சகல ஆவணங்களையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளிடம் வேண்டப்படுகின்றது. கேட்கும் பட்சத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது தாமதிக்கும் பரீட்சார்த்திகள் இப்பதவிக்கு நியமனம்பெறத் தகுதியற்றவராவார்.

15. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சையின் ஒழுங்குவிதிகளின்படி பரீட்சார்த்தி எவரும் அதற்குத் தோற்றுவதற்கு தகைமையற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது அதற்குப் பின்பு அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்யப்பட முடியும். பரீட்சார்த்தி வேண்டுமென்றே பிழையான தகவல்கள் வழங்கியிருப்பது அல்லது முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவரென அவரது சேவைக்காலத்தின் எந்நேரத்திலேனும் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரை உடனடியாக பதவியிலிருந்து நீக்குவதற்கு காரணமாக அமையும். இவ்வறிவித்தலின் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உரியவாறு பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி நிலை இரத்துச்செய்யப்படும்.

16. ஒவ்வொரு வினாத்தாளுக்கும் தனித்தனியாக 40% புள்ளிகளுக்குக் குறைவின்றி பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகள் தொடர்பான விபரம் புள்ளிகள் அடிப்படையில் பட்டியல்படுத்தப்பட்டு மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும். மேலும் பரீட்சார்த்திகள் அனைவருக்கும் தத்தமது பெறுபேறுகள் தனித்தனியாக அறிவிக்கப்படும்.

17. இவ்வறிவித்தலில் விவரிக்கப்படாத ஏதேனும் உரிய விடயம் இருப்பின், அது மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையின் பேரில் தீர்மானிக்கப்படும்.

எஸ். எச். ஹரிஸ்சந்திர,
மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II பிரிவு 'ஆ' வைச் சேர்ந்த மோட்டார் வாகன பரிசோதகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

## OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT OF MOTOR VEHICLE EXAMINERS TO CLASS II SEGMENT B OF THE SRI LANKA TECHNOLOGICAL SERVICE FOR THE DEPARTMENT OF MOTOR TRAFFIC- 2013

(அலுவலக பாவனை பொருட்டு)

பரீட்சையில் தோற்றவிருக்கும் மொழி மூலம் :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

1. தனிப்பட்ட தகவல்கள் :

1.1 முதலெழுத்துக்களை இறுதியிலிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ+ம்: PERERA, C.R.E.C.

1.2 முதலெழுத்துக்கள் குறித்து நிற்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.3 முழுப் பெயர் (சிங்களம்/தமிழில்) :-----.

1.4 நிரந்தர முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய) (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.
..........................................................................................

1.5 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

1.6 விவாகமானவரா? /விவாகமாகாதவரா?
(விவாகமானவர் - 01, விவாகமாகாதவர் - 2)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

1.7 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.8 பிறந்த திகதி :-

ஆண்டு: [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

1.9 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியன்று வயது :-

வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள் : [ | ]

1.10 நீங்கள் இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பொருத்தமற்ற சொல்லை வெட்டி விடவும்) :-

(அ) ஆம்/இல்லை :-----.

(ஆ) பரம்பரையாக /பதிவு மூலம் :-----.

2. **கல்வித் தகைமைகள் :**

(i) க. பொ. த. (சா. த.) :

சித்தியடைந்த வருடம் : .................. பரீட்சை சுட்டிலக்கம் : ..................

| சித்தியடைந்த பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |

(ii) க. பொ. த. (உ. த.) :

சித்தியடைந்த வருடம் : .................. பரீட்சை சுட்டிலக்கம் : ..................

| சித்தியடைந்த பாடங்கள் | பெறுபேறு |
|---|---|
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |
| ................................ | .............................. |

(iii) பல்கலைக்கழகப் பட்டங்கள் அல்லது வேறு உயர் கல்வித் தகைமைகளைக் கொண்டிருப்பின் அவை தொடர்பான விபரங்கள் :

| பட்டத்தின் பெயர் | கற்ற பாடங்கள் | சித்தியடைந்த வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|
| ............ ............ | ................ ................ | .................. .................. | .................. .................. |

3. தொழில்சார் தகைமைகள் :

| பாட நெறியின் பெயர் | நிறுவனம் | பாடநெறி காலம் வருடங்கள் | சித்தியடைந்த வருடம் |
|---|---|---|---|
| .............. .............. | ................ ................ | .................. .................. | .................. .................. |

(ii) (அ) பயிற்சி பெற்ற மோட்டார் கராஜின் பெயரும் முகவரியும் : -----.

(ஆ) குறித்த கராஜின் பதிவு இலக்கம் :-----.

(இ) பயிற்சி பெற்ற காலம் : ------- இலிருந்து ------- வரை ------ வருடங்கள்

(iii) (அ) சாரதி அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் மற்றும் வாகன வகுப்பு :-----.

(ஆ) வழங்கப்பட்ட திகதி : -----.

4. அரசாங்க திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில் சேவையாற்று பவர் எனின் -

திணைக்களத்தின் /கூட்டுத்தாபனத்தின் பெயர் : -----.
தற்போதைய பதவி :-----.
அதற்கு நியமிக்கப்பட்ட திகதி :-----.
முகவரி :-----.

5. ஏதேனும் நீதிமன்றம் ஒன்றில் ஏதாவது குற்றம் தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/இல்லை ):-----.
ஆம் எனில், விபரமாக குறிப்பிடவும் : -----.

6. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட ரூ. 1,000 தொகைக்கு மாவட்டச் செயலகம்/பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ........................ ஆந் திகதிய ........................ ஆம் இலக்கமுடைய திகதியுடைய பற்றுச்சீட்டு பின்புறத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

7. **விண்ணப்பதாரரது வெளிப்படுத்துகை :**

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் வெளிப்படுத்துகிறேன். இதிலுள்ள தகவல்களில் ஏதேனும் பிழை யானது அல்லது பொய்யானது என, நான் தெரிவுசெய்யப்படுமுன் தெரியவந்தால் எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு உட்படும் எனவும், நான் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அதுபற்றி கண்டுபிடிக்கப்பட்டால் எனது நியமனம் உடனடியாக இரத்துச் செய்யப்படும் எனவும் நான் நன்கு அறிவேன். மேலும், பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிகளுக்கேற்ப அமைந்தொழுகுவேன்.

........................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : -----.

(விண்ணப்பதாரி அரசாங்க திணைக்களத்தில்/கூட்டுத்தாபனத்தில் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றில்/மாகாண சபையில் சேவையாற்றுபவராயின் திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரூடாக அல்லது பிரதம செயலாளரூடாக தனது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

**திணைக்கள அல்லது கூட்டுத்தாபனத் தலைவரின் சான்றிதழ்**

திரு./திருமதி/செல்வி ...................... இத்திணைக்களத்தில்/உள்ளூராட்சி மன்றத்தில்/மாகாண சபையில் சேவையாற்றுகிறாரா எனவும், அவரது வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானவை எனவும், உரிய வர்த்தமானி அறிவித்தலில் காட்டப்பட்டுள்ளவாறு இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதிகளைக் கொண்டிருக்கிறார் எனவும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் தற்சமயம் இருக்கும் பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

..........................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

பெயர் : -----.
பதவி : -----.
முகவரி : -----.
திகதி : -----.

11-206

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.